பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 4-2-40 பிரமாதி௵ தைமீ 22உ	முத்து 13

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
உயிர்நிலை	... ...	366
உலக வர்த்தமானம்	... ...	368
இது தெரியுமா?	... ...	369
ஊர் வதந்தி	... ...	370
உதிர்ந்த மணிகள்	... ...	371
எலிடரிஸம்	... ... ஜே. வி. எஸ்.	372
உமாவின் வாழ்வு	... ... வி. எஸ். எஸ்.	374
பூஞ்செடி மோகினி	... ... டி. ராஜகோபாலன்	380
ஐ. ஸி. எஸ். மாமா	... ... ஆர். ஜயலக்ஷ்மி	382
சிறுவர் பகுதி	... ... பார்வதி	385

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



உயிர் நிலை

இப்பொழுது உலகத்தில் மூன்று இடங்களில் யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த யுத்தங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள் என்று தான் சொல்லவேண்டும். பிரிட்டனும் ஜெர்மனியும் மேற்கு முனையிலும், ரஷ்யாவும் பின்லாந்தும் வடக்கு ஐரோப்பாவிலும், ஜப்பானும் சைனாவும் கிழக்கு ஆசியாவிலுமாக, ஸ்தலங்களைப் பங்குபோட்டுக்கொண்டு யுத்தத்தை நடத்துகின்றன. பிரிட்டிஷார், அவர்கள் சம்பிரதாயப்படி, சர்வ படாடோபங்களுடனும் "யுத்தம் தொடங்கிவிட்டோம்" என்று கர்ஜிப்பதாலும், "யுத்தம் நடந்து வருகிறது" என்ற அறிக்கைகளாலும் "விரோதிகளை விரட்டியடித்து விட்டோம்" என்ற வாராவார யுத்த விமர்சனங்களாலும் யுத்தத்தை நடத்தி வருகிறார்கள். ரஷ்யாவோ முன்பின் பார்க்காமல் பின்லாந்துடன் யுத்தத்துக்கு இறங்கிவிட்டது. பாவம் பனிகாலம் தான் பின்லாந்துக்கு உண்மையில் உதவியளிக்கிறது. கிழக்கு ஆசியாவிலோ ஜப்பான் வெகு நைஸாக சைனாவுடன் சண்டை செய்துக்கொண்டிருக்கிறது. சைனாவோ ஒடுங்கினபாடில்லை.

இவ்விதம் ஒவ்வொரு தேசமும் தன் தன் சுயநலத்தை உத்தேசித்து யுத்தம் செய்துக்கொண்டிருக்கின்றன. பிரிட்டனின் லக்ஷியம் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதுதான் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதும் பிரிட்டனின் லக்ஷியமே. ரஷ்யா தன் பலத்தைப் பெருக்க உத்தேசித்திருக்கிறது. ஜப்பான் தன் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதில், பிரிட்டனோடு போட்டி போடுகிறது.

மூல காரணம்

இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் பிரிட்டன் இதுவரையில் கையாண்டுவந்த வெளிநாட்டுக் கொள்கைதான். ஏகாதிபத்தியத்திற்கும் பொதுவுடைமைக்கும் ஜன்ம விரோதம். எனவே பிரிட்டன், ஜெர்மனி, ரஷ்யாவை எதிர்க்கும் என்று எண்ணி, ஜெர்மனிக்கு பல விதங்களில் உபகாரம் செய்தது. ஆஸ்டிரியாவை தத்தம் செய்தது. செக்கோஸ்லோவேகியாவை பலிகொடுத்தது. மெமல் பிரதேசத்தை அர்ப்பணம் செய்தது. கடைசியில் ஏமாந்தது. காற்றும் நெருப்பும் கலந்ததுபோல் ஜெர்மனியும் ரஷ்யாவும் ஐரோப்பாவை அலங்கோலப்படுத்துகின்றன. கிழக்கேயோவெனில், ஏகாதிபத்திய முறையைத் தானே கையாண்டு காண்பித்துவிட்டு இப்பொழுது தானே அம்முறையை, இன்னும் அதிக பலத்துடன் அரிய சந்தர்ப்பத்தில் கையாளும் ஜப்பானை பிரிட்டன் கண்டனம் செய்வதென்றால் நடக்கிற காரியமா? அதுவும் ஜப்பானா பயப்படுவது? அதனால் வந்த கேடு தான் இப்பொழுது ஜப்பான் செய்யும் அழுத்தல்கள் எல்லாம். இப்படி "வழிவழியாகப்போனால் கூட விதி விதியாக வரவேணுமா?" என்று பிரிட்டன் தலையில் அடித்துக்கொண்டும் கையைப் பிசைந்துக்கொண்டும் முழிக்கிறது.

யுத்தப் போக்கு

சண்டையோ மாமியார் செத்து மாட்டுப்பெண் அழுவதைப்போல் நடக்கிறது. பிரிட்டன் தற்காப்பு மாத்திரம்தான் செய்துவருகிறது. எதிரியுடன் தீவிர யுத்தம் செய்ய ஆரம்பிக்கவில்லை

ஜெர்மனியோ தன் வேலையை முடித்துக் கொண்டது. போலந்தை வசப்படுத்தி யாய்விட்டது. "இனி சண்டை ஏன்?" என்று பேசாமல் இருக்கிறது. ஆனால் பரஸ்பர விரோத மனப்பான்மை பொருளாதார விஷயங்களில்தான் நன்றாக வேரூன்றி இருப்பதாகத் தெரிகிறது. பொருளாதார யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுவிடும் என்று பிரிட்டன் எண்ணுகிறது அதன்படி ஜெர்மனி வெகு நாட்கள் சண்டை செய்ய முடியாது, என்று பிரிட்டனும் இன்னும் பலரும் நம்புகிறார்கள். இதற்கு பிரிட்டன் ஒரு பெரிய சாம்ராஜ்யமாக இருப்பதுதான் காரணம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் இப்பொழுது நடந்துவரும் சப்மெரைன் சண்டையைப் பார்த்தால் பிரிட்டன் தன்னுதிக்கத்தின் கீழுள்ள தேசங்களின் உபகாரத்தை அதிகமாகப் பெற சாத்யமில்லை. ஆகவே பிரிட்டன் கதியும் ஜெர்மனியுடையது போலவே தான். ஜெர்மனிக்கு கப்பற்படை பலம் இல்லை. இதில் பிரிட்டன்தான் வல்லரசு. ஆனால் விமானப் படையால்தான் ஜெர்மனி பிரிட்டனை தீவிரமாக எதிர்க்கக்கூடும். இதுவரையில் தீவிர விமானப் படை எடுப்பு இல்லாதிருப்பதற்குக் காரணம் ஜெர்மனிக்குப் போதிய அளவு யுத்தத்துக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்காததுதான். ரஷ்யா உதவி செய்கிறது; ஆனால் தானே சண்டை செய்துகொண்டிருக்கும்போது எவ்விதம் ஜெர்மனிக்கு மிகுந்த உதவிசெய்ய முடியும்? எனவே ரஷ்யா செய்யும் உதவி ஜெர்மனிக்குப் போதாது.

பால்கன் செல்வம்

ஆகையால் பலமாக யுத்தம்செய்ய ஜெர்மனி தீர்மானித்தால், அது பால்கன் பிரதேசமாகிய ருமேனியா, யுகோஸ்லேவியா போன்ற பிரதேசங்களில் கிடைக்கும் யுத்த சாமான்களால்தான். அதை யுத்தேசித்துதான் பெரும்படை எடுக்கப் போகிறதாக ஜெர்மனி அடிக்கடி பூச்சி காட்டிக்கொண்டிருக்கிறது. அதன் படிதான் இப்பொழுதும் ருமேனியா எண்ணெய் பிரச்னை முக்கியமானதாக இருக்கிறது. பால்கன் பிரதேசங்களுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் பலத்த வியாபாரம் நடந்துவருகின்றன. பொருளாதார முறையில் அவ்விரண்டு தேசங்களும் வியாபாரத்துக்குகந்தவை. ஆகவே ருமேனியாவின் எண்ணெய் சப்ளை ஜெர்மனிக்குப் பேருதவியாக இருப்பதோடு நில்லாமல் தன் வியாபாரத்தையும் பெருக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் பிரிட்டிஷ் பிரெஞ்சுக்காரர்களுக்கு ருமேனியா—ஜெர்மனி எண்ணெய் வியாபாரம் பலக் குறைவை யுண்டாக்கக்கூடியது. ருமேனியா எண்ணெய் ஜெர்மனிக்குச்செல்லும்படி பிரிட்டிஷார் விட்டார்களானல், ஹிட்லர் "யுத்தத்தில் ஜயம் அடைவதில் சந்தேகமே இல்லை" என்று கர்ஜிப்பது உண்மையாய் விடும். இப்பொழுது பால்கன் பிரதேசங்களில் தான் ஹிட்லரின் உயிர் ஒடுங்கி இருக்கிறது. அதுதான் ஜெர்மனியின் உயிர் நிலை.

ஹிட்லர் மதத்தை அடக்கவேண்டுமென்றால் பிரிட்டன் அதில்தான் அடிக்க வேண்டும்.

போனதைப்பற்றி வருந்துவதில் பலனில்லை. தவறிப்போன ஆங்கிலோ—பிரஞ்சு—ஸோவியத் உடன்படிக்கையைப் பற்றி கவலைப்படவேண்டாம். மூனிச்சையும் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டாம். வெர்ஸைல்ஸைகூட மறந்து விடலாம். இனி நடக்கப்போவதையாவது சரிவர நடத்தினல் பிரிட்டனுக்கு ஜெயம்தான். பயம் இல்லை.

உலக வர்த்தமானம்

யுத்தம் நடக்கிறது என்று ஞாபகப் படுத்துவதற்காக சென்ற திங்கள்கிழமை யன்று ஹிட்லர், பிரிட்டிஷ் துறைமுகங் களின்மேல் ஓர் பெரிய விமானப்படை எடுத்தாராம். பலத்த படை எடுப்பு தான். ஆனால் பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களை ஊர்க்கோடி வரை யில் விரட்டி அடித்துவிட்டு வந்துவிட் டன, என்று செய்தி கூறுகிறது. பிரிட் டிஷ் கப்பல்களுக்கு அதிகமாக நஷ்டம் ஏற்படவில்லை.

ஹிட்லர் சென்ற செவ்வாயன்று சொற்பொழிவு ஆற்றினர். அதில் "ஜெயம் நம்மை விட்டு எங்கும் செல்ல மாட்டாள்" என்று வீராப்பு செய்து கொண்டாராம். ருமேனியா எண்ணெய் சம்பந்தமாக ஹிட்லர் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிருர், என்று தெரி கிறது. இடுக்கியில் அகப்பட்டுக்கொண்டு முழிப்பதுபோல் நிற்கிறது ருமேனியா இரண்டு கட்சியாருக்குமிடையில்

பின்லாந்து கூட ஒரு பெரிய விமானச் சண்டை செய்ததாம். ரஷ்ய எல்லைப்புற பிரதேசங்கள் நஷ்டமடைந்தனவாம். ரஷ்ய சைன்யம் வெகு சிரமப்பட்டு வரு கின்றன, என்று செய்தி கூறுகிறது.

ரஷயாவின் தடபுடல்களைக் கண்டு இத்தாலிக்கு பொறுக்கமுடியவில்லை. தனக்கே ஆபத்தாய் விடுமோவென்று பயந்து தானும் யுத்தத்துக்கு தயாராய்க் கொண்டுவருகிறது. கடைசி ஆக்கிர மிப்பு விடாய் தீர்ந்துவிட்டதால் இனி இத்தாலியும் மீசையைச் சற்று முறுக்கிப் பார்க்கலாம்.

அஸாம மாரு என்ற ஜப்பானியக் கப்ப லிலிருந்து சில ஜெர்மனியர்களை பிரிட்டிஷ் யுத்தக்கப்பல் பிடித்து சிறை செய்தது. இச்செய்கை ஜப்பானுக்கு மிகுந்த அவ மானத்தை விளைவிக்கக்கூடியதாக இருக் கிறதாம். அதனல் ஜப்பான் பிரிட்டிஷ் செய்கையைக் கண்டிப்பதோடு நிற்காமல் டிண்ட்ஸின் முற்றுகையை மறுபடியும் ஆரம்பிக்கப்போவதாக மிரட்டுகிறது. இதற்குப் பிரிட்டன் செய்யப்போவ தென்னவென்பது தான், தெரியவில்லை.

இந்தியா முழுவதும் சுதந்திர தினக் கொண்டாட்டம் பலமாக நடந்தது. கொண்டாடாத இடமே கிடையாது— கொண்டாடாத மனிதர்களே கிடையாது. ஜின்னு தவிர. வெகு சாந்தமாக சுதந்திரப் போர் செய்ய பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள், பொதுமக்கள்

ஜின்னு, முஸ்லீம் சகோதரர்களை சுதந் திர தினக் கொண்டாட்டத்தில் சேரா திருக்கும்படி வேண்டிக் கொண்டார். ஆனல் முஸ்லீம்கள் எல்லாரும் தேசியக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்கள். ஜின்னுவுக்கு இன்னுமொரு புறத்தில் அபஜெயம். காங்கிரஸ் மந்திரி சபைகளின் அட்டூழியங்களை விசாரிக்க ராயல் கமிஷன் வேண்டுமென்று கேட்டார். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அவர் பிரேரணையை நிராகரித்து விட்டது. அதனல் ஜின்னு வுக்கு பிரிட்டிஷார்மேல் கோபம். ஆனல் அந்த கோபத்தை காந்திஜி மேல் காட்டு கிருர். காந்திஜி தலைமை வகிப்பதால் தான் காங்கிரஸும் இந்தியாவும் சேர்ந்து கெட்டு விடுகின்றனவாம். மனக்குறை வுடன் கூறினர். இனி என்ன செய்யப் போகிருரென்பதுபற்றி யோசிக்கிருர் போல் தெரிகிறது.

அகில இந்திய முஸ்லிம் மகாநாடு ஒன்று நடக்கப்போகிறது. ஸர் ஸிகந்தர் ஹயத்கானும் அதில் கலந்துகொள்வார் என்று தெரிகிறது. ஜின்னு அதில்தான் எதிர்கால முஸ்லீம்லீக் போக்கை நிச்சயம் செய்வார், எனத் தெரிகிறது. ஜின்னு வை அநேகமாக எல்லா முஸ்லீம்களும் வெறுக்கிருர்கள் என்று "குபார்" கிளம்பி இருக்கிறது. காரணம் அவர் அசட்டுத் தனம் தான்.

இது தெரியுமா

மைசூர் ரயத்துகளுக்கு கிஸ்தி குறைவு

மைசூர், மதராஸ், பம்பாய், இம்மூன்று பிரதேசங்களின் நிலவரித்தொகைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், மைசூர் நில வரிததொகை குறைவு என்பது ஏற் படும். சென்னை ராஜதானியில் ஒரு ஏக்கர் ரயத்வாரி நிலத்தீர்வையைக் காட்டிலும், மைசூர் சமஸ்தானத்தில் ஒரு ஏக்கர் ரயத்வாரி நிலத்தீர்வை 30 சதவிகிதம் குறைவு. பிரிட்டிஷ் மைதானங்களிலிருந்து கிடைக்கும் சராசரி வருமானத்தைக் காட்டிலும், மைசூர் மைதானத்திலிருந்து அதிகமாக வருமானம் வருகிறது. இதற்குக் காரணம் மைசூர் மைதானங்களில் பயிரிடப்படும் கம்புப் பயிர், மற்ற பிரிட்டிஷ் மைதானங்களில் பயிர் செய்யப்படுபவைகளைக் காட்டிலும் 30 சதவிகிதம் அதிகபலனை அளிக்கிறது. எனவே மைசூர் மைதானத்தின் தீர்வை பிரிட்டிஷ் மைதானத்தின் தீர்வையைக் காட்டிலும் அதிகமில்லை என்றே சொல்லலாம். மைசூர் சர்க்கார் மொத்த வருமானத்தில் 16 சத விகிதத்துக்குமேல் நில வரி வசூல் செய்வதில்லை.

ஒரு வருஷத்துக்கு முன் வரையில் மைசூரில் புஞ்சை நிலவரி ரூ. 2-12-0 லிருந்து ரூ. 3-8-0 வரையில் இருந்தது. ரூ. 2-12-0 க்கு மேல் வரி இல்லாமல் குறைக்கப்பட்டது. மால்காட் தோட்டப் பிரதேசங்களின் வரி 12½ சதவிகிதம் குறைக்கப்பட்டது. மைசூர் சமஸ்தானம் மொத்த நிலவரியில் 9 சதவிகிதம் விவசாய அபிவிருத்திக்காக செலவழிக்கிறது.

சாஸ்திர முறைப்படி விவசாயம்

உயர்ந்த ரகப்பயிர்களைச் செய்யும் முறைகளையும், இந்திய விவசாயிக்கு அதிக வருமானத்தைக் கொடுக்கும் வழிகளையும், விவசாய ஆராய்ச்சி இம்பீரியல் கவுன்ஸில் தேடி வருகின்றது, என்று அதன் 1938-39ம் வருஷத்து வருஷாந்திரக் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. சென்ற ஐந்து வருஷங்களாக நடத்திய நெல், கரும்பு பயிர்களின் பரிசோதனைகளின் முடிவுகளை முதல் தடவையாக ஒன்றாக சேர்க்கப்பட்டிருக்கிறது. அம்முடிவுகளை நிலப்பரிசோதனைக் கூட்டுக் கமிட்டி மதிப்பிட்டது. புதிய எரு இடும் முறைகளையும் சிபார்சு செய்தது. இந்த முறைகள் இப்பொழுது அனேகமாக எல்லா நெல், கரும்புப் பயிர் பரிசோதனை நிலயங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

புகையிலை பயிரிடும் முறையைக் கற்க ஒரு இந்தியர் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். இன்னும், பம்பாயிலிருந்து ஒருவரும், பீஹாரிலிருந்து ஒருவரும், சிக்கிரத்தில் அமெரிக்கா செல்வார்கள்.

ஸிங்கோனப் பயிர் விருத்தியாக்க கவுன்ஸில் ஒரு விசாரணை நடத்திற்று. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட முறைகளை அனுஷ்டிக்க யோசித்துக்கொண்டிருக்கிறது.

இந்த வருஷத்தில் நிர்ணயிக்கப்பட்ட புதுத் திட்டங்கள் மிகுந்த பலன் தரக் கூடியவை. கரும்புப் பயிரைப் பாழாக்கும் பூச்சிகளை அழிக்க கவுன்ஸில் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டது. சென்னை தேங்காய்களைப்பற்றிய ஆராய்ச்சி ஒன்று நடத்திற்று.

மூலிகைகளைப்பற்றி நடத்திய ஆராய்ச்சியில் 700 விஷச் செடிகளைக் கண்டு பிடித்தது.

ஊர் வதந்தி

கிரிம்லின்

ரஷ்யாவின் ஆட்சிசாலை

கிரிம்லின் என்னும் பெயர் தினந்தினம் பத்திரிகையில் அடிபட்டு வருவதை நாம் பார்க்கிறோம். ஐரோப்பாவிலுள்ள பெரிய தேசியவாதிகள் யுத்தம் தொடங்குவதற்கு ஆறுமாதங்களுக்கு முன்பிருந்தே இவ்விடத்திற்கு விஜயஞ் செய்துகொண்டு வருகிறார்கள். இன்றுமட்டும், அதாவது ஸ்டாலின் ஆதிக்கத்திலமட்டும் இது புதிதல்ல. பதினைந்தாவது நூற்றாண்டிலிருந்தே கிரிம்லின் ரஷ்யாவில் ஓர் முக்கியமான இடமாக விளங்குகிறது.

கிரிம்லின் ஓர் தனிக்கட்டிடமல்ல. "கிரிம்லின் அரண்மனை" எனக் கூறுகிறார்களே யொழிய, இங்கே பல அரண்மனைகளும், பல மாதாகோயில்களும், பல பெருகட்டிடங்களும், பாசறைகளும்,வைத்தியசாலைகளும் பொதிந்து கிடக்கின்றன. தேம்ஸ் நதிக்கரையில் லண்டன் மாநகரம் விளங்குவதேபோல மாஸ்க்வா நதிக்கரையில் இந்நகரம் சிறந்து விளங்குகிறது. கிரிம்லின் பல நூற்றாண்டுகளாக ரஷ்ய சக்கரவர்த்திகளுக்கும், பெருந்தலைவர்களுக்கும் இருப்பிடமாக இருந்து வருகிறது. கால மாறுதல்களினாலும், நெருப்பினாலும், பிறநாட்டார் படையெடுப்பினாலும் இந்நகரம் அழிந்துபோனாலும் அப்பப்பொழுது வெகு அழகாகவும், புதிதாகவும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. 1917-ல் நடந்த உள்நாட்டுக் கலகத்தில் மற்ற நகரங்களைப்போல இது அதிகமாகச் சேதமடையவில்லை. கம்யூனிஸ்டு கட்சியார், கலகத்தில் வெற்றிமாலை சூடி ஜார் சக்கரவர்த்தியைத் துரத்தியடித்ததும் இதில் குடிபுகுந்தார்கள். அதிலிருந்து லெனின் இங்கே வசித்தவந்தான். இப்பொழுது ஸ்டாலின், மாலடோவ், காலினின் முதலியவர்கள் இங்கே வசித்து வருகிறார்கள். ஜார் சக்கரவர்த்தி தர்பார் நடத்தியவிடத்தில் இப்பொழுது கம்யூனிஸ்டு கக்ஷி கூட்டம் கூடுகிறது. முன்பு களியாட்டங்கள் நடந்த இடமெல்லாம் இப்பொழுது பாசறைகளாக உபயோகப்பட்டு வருகின்றன. அதிலிருக்கும் மாதாகோயில்களும், சில சரித்திர சம்பந்தமான இடங்களும் இப்பொழுது கண் காக்ஷி சாலைகளாக இருக்கின்றன.

கிரிம்லினுக்கு அநேக உயர்ந்த வாயில்கள் இருக்கின்றன. முன்பெல்லாம் இவ்வாயிற்படிக்கு மேலுள்ள கோபுரங்களிலிருந்து சிப்பாய்கள் காவல் காத்துக் கொண்டிருந்தனரெனச் சொல்லப்படுகிறது. அங்கே ஒரு பக்கத்திலுள்ள சிகப்பு மைதானத்திற் கருகிலிருக்கும் பெரிய கோபுரத்திலிருந்து, கொடுங்கோல் மன்னன் ஜார் ஐவான், சிறைச்சாலைக்கூடத்தில் கைதிகளைக் கழுவிலேற்றுவதைப் பார்த்துச் சந்தோஷப்படுவானாம். ஆனால் இப்பொழுதோ அதே இடம் ரஷ்யர்களுக்கு ஓர் பெரிய யாத்திரை ஸ்தலமாக விளங்குகிறது. அதே இடத்தில் கொடுங்கோல் மன்னனான ஜார் சக்கரவர்த்தியை நாட்டைவிட்டுத் துரத்திய லெனின் சிலை நாட்டப்பட்டிருக்கிறது. அதே இடத்தில்தான் ரஷ்யாவை அரக்கன் ஆக்ஷியிலிருந்து விடுவித்த கலகத்தில் மாண்டவர்களின் புனிதமான சாம்பல் புதைக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய சரித்திர சம்பந்தமான இக்கட்டிடங்கள் கூட்டம் முதன் முதலில் பன்னிரெண்டாவது நூற்றாண்டில் மரத்தினால் கட்டப்பட்டது. இது பதினைந்தாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் சீக்கிரமாகவே மறுபடியும் கல் கட்டிடமாகக் கட்டப்பட்டது. அப்பப்பொழுது இது புதுப்பிக்கப்பட்டது. அதில் அழகிய தூண்களும், உயர்ந்த மாடங்களும், சலவைக் கற்களாலிழைத்த கூடங்களும், அழகிய சிறந்த படங்கள் மாட்டியிருக்கும் அறைகளும், மற்றும் ராஜபோகத்திற்கு வேண்டிய சௌகரியங்களும் அடங்கி இருக்கின்றன.

எல்லாவற்றிலும் டெரம் அரண்மனைதான் முக்கியமானது. இங்குதான் ஜார் சக்கரவர்த்திகள் குடும்பத்துடன் வாழ்ந்தனர். இவ்வரண்மனையில்தான் அநேக கொடுமைகள் நடந்ததெனச் சொல்லப்படுகிறது. இவ்வரண்மனையிலுள்ள சுவர்களுக்கு நாவிருந்தால் பல ஆண்டுகளாக நடந்த கொலைகளையும், சித்தரவதைகளையும் வெளிப்படுத்துமென்பதில் சந்தேகமில்லை. முன் காலத்திலெல்லாம் "இவ்வரண்மனைக்குள் நுழைந்தவர்கள் திரும்பிவந்ததில்லை" யெனச் சொல்லிக்கொள்வார்கள்.

ராய்ஸ் வீக்லி.

உதிர்ந்த மணிகள்

ஐரோப்பாவில் 1914-லிருந்து 1918-ம் வருஷம் வரையில் நடந்த சம்பவங்களின் ஞாபகமும், 1939-ல் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் காணும் காட்சியும். இனி இது போன்ற சம்பவங்கள் எதிர் பார்க்கப்படுவதும், "நாம் கடவுள் சிருஷ்டியில் உண்மையில் உயர்ந்தவர்களா" என்ற சந்தேகத்தைக் கிளப்புகின்றன.

ஸி. இ. எம். ஜோட்

* * *

இந்தியா சுயேச்சை அடையும் வரையில் காங்கிரஸ் பதவி ஏற்கவேண்டும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பதவி ஏற்பு முக்கியமானது

ஸத்தியமூர்த்தி

* * *

யுத்தம் முடியும் வரையில், இந்தியா சட்டத்தின் சமஷ்டி பாகத்தைத் தள்ளிப் போடுவதாக வைஸ்ராய் தெரிவிப்பது அவர் சம்பந்தப்பட்ட வரையில் சரியே; ஆனால் நம்முடைய உரிமைகளை நாம் ஏன் கணக்கில்லாத நாட்கள் விட்டுக்கொடுக்கவேண்டும் என்பதுதான் விளங்கவில்லை

இந்தியன் எக்ஸ்பிரஸ்

* * *

கூடிய சீக்கிரத்தில் இந்தியாவில் நடக்கப் போகும் அரசியல் மகா நாடுகளில் (Constitutional Conference) இப்பொழுதாவது அல்லது கொஞ்ச நாட்கள் கழித்தாவது, இப்பொழுது இந்தியாவில் உலாவி வரும் அரசியல் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வழி ஏற்படும், என்று நம்புகிறேன். இந்தியாவும் ஒரு சுயேச்சை பெற்ற டொமினியனாகும். இதனால் எதிர் காலத்தில் ஓர் புதிய சமஷ்டி சர்க்கார் அமைக்கப் பெறும் என்பது விளங்குகிறது. அந்த சர்க்கார் சரிவர நடக்கவேண்டுமென்றால் (சர்க்கார் யார் ஆதீனத்திலிருந்தாலும் பரவாயில்லை) காமன்ஸ் சபையிலுள்ள, நாம், சமஷ்டி சர்க்காரின் நிதி சம்பந்தப்பட்ட பாகத்தை மாத்திரம், எவ்விதம் அமைத்தால், மொத்த அமைப்பையும் கெடுக்க வல்ல பணக்குறைவு என்பது ஏற்படாமல் சரிவர நடக்குமா அவ்விதம் நாம் அதை அமைக்க நிச்சயிக்கவேண்டிய தவசியம்.

இந்தியா உதவி காரியதரிசி

* * *

இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து சீக்கிரமே கிடைக்கும் என்று வைஸ்ராய் கூறினார். நாம் பலாத்கார முறையைக் கையாண்டிருந்தால், இது போன்ற ஒரு வாக்குறுதி பிரிட்டிஷாரிடமிருந்து பெறுவதற்கு, குறைந்த பக்ஷம் 100 கப்பல்களையும் ஒரு லக்ஷம் மனிதர் உயிர்களையும் போர்க் களத்தில் பலி கொடுத்திருக்கவேண்டும். ஆனால் ஒரே ஒரு அஹிம்ஸா முறையில் இதைப் பெற்றோம்—பதவியிலிருந்து விலகுவது.

ஸி. ராஜகோபாலாச்சாரி.

* * *

குடியேற்ற நாட்டந்தஸ்து மாத்திரம் கிடைத்தால் போதாது. நம்முடைய லக்ஷியம் பூரண சுதந்திரமே.

எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார்

எலிடரிஸம்

(ஜே. வி. எஸ்)

வெடிமருந்துக் குவியலுக்கு வத்தி வைத்தாகிவிட்டது. அது நீண்ட கொழுந்துகள் விட்டு பயங்கரமாக எரிய ஆரம்பித்துவிட்டது. அது ஆரம்பித்த இரண்டு வாரங்களுக்குள் ஐரோப்பா முழுதும் பரவிவிட்டது. அதனால் உண்டாகும் கொடுமையின் உண்மைத் தோற்றம் இனிதான் வெளியாகப் போகிறது. பெரியோர் சிறியோர் அனைவரும் தயை தாட்சண்யமில்லாமல் அதனால் நாசமாக்கப்படுவார்கள்.

எங்கு கண்டாலும் யுத்தம், யுத்தம் என்ற கூக்குரலே கேட்கிறது. கூட்டம் கூட்டமாக மக்கள் கொலை செய்யப்படுவதற்கு யுத்தம் என்று பெயராம்! பெண்கள், குழந்தைகள், நோயாளிகள், நொண்டிகள் — யாரும் இதற்கு இலக்காகாதிருத்தல் இயலாது.

மறுபடியும் இன்று நாகரிகம் நடுச் சந்தியில் நிற்கிறது. அது இன்னும் முற்றும் அழிந்து விடவில்லை. ஆனால் இனி வரும் நிகழ்ச்சிகளால்தான் அது முற்றும் அழியும் நிலை ஏற்படவிருக்கிறது. ராஜ தந்திரங்கள் கணக்கின்றிக் கையாளப்படுகின்றன. இவை நிகழுவதற்கு முன்பே நாட்டில் கஷ்டமும் துயரமும் தலை விரித்து ஆடத் தொடங்கிவிட்டன. பின்னால் வரவிருக்கும் கஷ்டத்திற்கு இது ஒரு முன்னெச்சரிக்கை போலும்.

பிரசவ வேதனை படும் பெண்போல மனித சமூகம் நடுங்குகின்றது. இவ்வளவு காலமாக அது இருந்து வந்த முறையினின்றும் அனேகமாகப் பிறழ்ந்துவிட்டது. ரான்ஸ்கி என்பவருடைய "லெக்ஸ் லூப்ரீமாவும் யூனிவர்ஸல் பிலாஸபியும்" என்னும் நூலின் முடிவிற் கிணங்கவே அனைத்தும் நடைபெற்று வருகின்றன. எல்லாத் தேசங்களும் சேர்ந்து வரைந்த திட்டங்களுக்கு மாறாக, போலந்து நிபுணர்கள் எதிர் பார்த்தபடியே எல்லாம் நிகழ்கின்றன. இறந்த காலத்தில் நடந்தனவற்றைக்கொண்டே எதிர் காலத்தில் நடப்பவற்றையும் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு நோக்கின் என்ன விளங்குகிறது?

ஒன்றும் நம்பிக்கை யூட்டுவதாக இல்லை. இங்கிலையில் ஏற்பட்ட ரஷிய ஜெர்மன் ஒப்பந்தத்தைக் கண்டு இராஜீய வாதிகள் வியப்படையவில்லை. அது ரான்ஸ்கிரின் "அப்ஸல்யூட் பிலாஸபி" யில் கூறப்பட்டுள்ளபடியே நடைபெற்றிருக்கிறது. அவ்வொப்பந்தமும் அதைச் செய்து கொண்டுள்ள நாடுகளும் எவ்வாறு அழிவெய்தும் என்பது அவருடைய "ப்ரொட்ரோம்" என்னும் நூலிலுள்ள இராஜ தந்திர விதிகளில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றது. அவர் அதில், அரசாட்சி வகுப்பு முறையில் நடை பெற்றது, பிறகு அரசன் ஒருவனே நாட்டின் அதிகாரியாக இருந்து ஆட்சி நடத்தியது, அதன்பின் பிரிட்டனில் இருப்பது போன்ற ஜனநாயக ஆட்சி உண்டானது முதலிய மாறுதல்களைத் தெளிவாகக் கூறி இருக்கிறார்.

மற்றும் பல நாடுகளில் அரசனுடைய அதிகாரம் முழுமையும் ஜனங்களுக்கு அளிக்கப்பட்டு அரசனற்ற குடியரசு சர்க்கார் நடைபெற்று வருகிறது. அவற்றை நோக்குங்கால் பிரிட்டனின் அரசியல் முறை எவ்வளவோ மேலானது என்பது நன்கு விளங்கும். அது ஜனங்களுக்குப் பூரண சுதந்திரம் அளிப்பதுமன்றி முடியாட்சிக்கும் இடமளிக்கிறது. சர்க்காருக்கும் அதை எதிர்ப்போருக்குமிடையில் எழக்கூடிய பிணக்குகளை மன்னர் தீர்த்து வைக்கலாம். ஆனால் பிரிட்டிஷ் மன்னர் அத்தகைய செயல் முழுமையையும் இன்னும் ஏற்கவில்லை.

தற்காலத்திலுள்ள அரசியல் முறைகளுக்குப் பின்வரப்போவது "எலிடரிஸம்" என்னும் ஆட்சிமுறை. அது, பரோ

பகார எண்ணமுள்ள, பெரிய லட்சியங்களைக் கொண்ட, அதிகாரத்தையோ, தன்னலத்தையோ சிறிதும் கருதாத, பெரிய தேச பக்தர்கள் திரைமறைவிலிருந்து நடத்தும் ஆட்சிமுறை. அவர்கள் தங்களுக்கென்று எவ்வித தனிப்பட்ட காரியாலயத்தையும் வைத்துக்கொண்டு வேலை செய்யமாட்டார்கள். இது ஒரு நல்ல முறையேயாகும். ஆயினும் அது மிகச் சமீபகாலத்தில் நடைமுறைக்கு வருமென்று தோன்றவில்லை. ஆனால் பிரிட்டன், போலந்து முதலிய நாடுகளில் உண்டாகும் அரசியல் முறை மாறுபாடுகளைக்காணில் "எலிடரிஸம்" வருவதற்கு நெடுங்காலம் சொல்லுமென்றும் கூறமுடியாது.

ஆகையினால் அடுத்தபடியாக முதன்மைபெறப் போவது போல்ஷ்விஸமல்ல. அது ஒருவகையான பிற்போக்கு முறை என்றே கூறவேண்டும் எவ்வித நன்மையும் செய்ய இயலாத அம்முறை சிறிதுகாலம் நடைமுறையில் இருக்கும். நாஸிஸம், போல்ஷ் விஸத்தை அழிக்க முயற்சிக்கும் ஒரு கட்சியே.

அடுத்தபடியாக நடைமுறைக்கு வரக்கூடியது நாஸிஸமோ போல்ஷ்விஸமோ அன்று, என மேலே கூறினேம். ஏனெனில் அவை சிறிதுகாலமே நிலைத்திருக்கக் கூடியவை. அன்றியும் அவை எவ்வளவு வளர்ச்சியடைய முடியுமோ அவ்வளவும் அடைந்தாகிவிட்டது. அவற்றின் முடிவும் தூரத்தில் தென்படுகிறது. அவற்றின் அழிவு ஏற்கனவே ஆரம்பித்தாகிவிட்டது. அத்தகைய முடிவுகாலம் மனித சமூகத்தின் நன்மையை முன்னிட்டு வரவேற்கப்படுகிறது. மனிதர்களுக்கு முக்கியமாகிய தெய்வ நம்பிக்கை இல்லாதிருப்பதால் அவை அழிவெய்தலல்லாது வேறென்ன செய்தல் கூடும்?

ரஷ்ய—ஜெர்மன் ஒப்பந்தம் அத்தகைய அழிவிற்கு ஒரு முன்னறிவிப்பேயாகும். சில நிகழ்ச்சிகளால் விநோதமான நட்பு ஏற்படுவது சகஜம். ஆயினும் தேசங்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவது அதைவிட அவசியம். அதற்குப் பேருழைப்பு இன்றியமையாதிருப்பினும் இருக்கும்.

பாரத மணி

சந்தா

உள்நாடு	ரூ. 4	(தபால் செலவு உள்பட)
வெளிநாடு	ரூ. 6	(தபால் செலவு உள்பட)

தனிப்பிரதி விலை 1 அணா.

விளம்பரம்

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. 1/8 பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

உமாவின் வாழ்வு

(வி. எஸ். எஸ்)

எனக்கு அன்று ஐந்து கடிதங்கள் வந்தன. அவைகளில் உமாவிடமிருந்து வந்த கடிதம் சட்டென என் கவனத்தை ஈர்த்து விட்டதால் பரபரப்புடன் அதைப் பார்க்கலானேன். அதை ஒரு தரம் படித்தேன். இரண்டு தரம்...... மூன்று...பத்து தரம் படித்தேன். அந்த எழுத்துக்கள்தான் என்ன அழகாகக் கோக்கப்பட்டிருந்தன. 'அவைகளை பத்து தடவைப் பருகிவிட்டு ஈஸிச்சேரில் சாய்ந்தேன். ஐந்து வருடங்களுக்கு முன் விளையூர் பெண்கள் ஆச்ரமத்தில் நான் தலைவியாயிருந்த காலத்தில் நடந்த அந்த சம்பவங்கள் எல்லாம் என் மனக்கண் முன் படச்சுருள்களாக ஒட ஆரம்பித்தன.

விளையூர் ஆச்ரமம், என் இன்னுயிர் தோழி ஸ்ரீமதி கமலேஸ்வரியாலும் அவளது கணவன் ஸ்ரீமான் ரகுநாத சர்மாவாலும் நடத்தப்படுவதாகும். உலகத்தில் பணம் படைத்தவர்கள் என்னென்னவோ காரியங்கள் நடத்திவருகிறார்கள். ஒரு சிலரே இறைவன் தந்த பொருளை பரோபகாரத்திற்காக சத்கருமத்தில் செலவழிக்கின்றனர். கேவலம் பணத்தை மட்டும் செலவழிக்கிறார்களில்லை. தங்களது அரிய காலத்தையும் புத்தியையும் உழைப்பையும் அதிலேயே செலவழிக்கின்றார்கள். இப்படிப்பட்ட புண்ய ஆத்மாக்களில் எனது தோழி கமலேஸ்வரியும் அவளது கணவர் ஸ்ரீமான் சர்மாவும் இருவர் ஆவர்.

புருஷன் வாய்த்தால் பெண் வாய்ப்பதில்லை. ஒருவர் தாராளமாயிருந்தால் மற்றொருவர் கருமியாயிருப்பர். ஆனால் கடவுளே இத்தம்பதிகளை ஒன்று சேர்த்தார் என்னலாம். நான் எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கூறப்படு முன்னர் கமலேஸ்வரி எப்படி அவரை அடைந்தாள் என்பதை நான் கட்டாயம் விவரித்தாக வேண்டும்.

நானும்கமலேஸ்வரியும் அகஸ்மாத்தாய் சந்தித்துப் பழகிக்கொண்ட நண்பர்களாவோம். அதன் பின்னர் இருவரும் ஒன்றாகவே கல்லூரியிற் சேர்ந்து எப். ஏ. பரீக்ஷை தேறினோம்.

என்னுடைய இருபதாவது பிராயத்திலேயே எனது கணவர் என்னைப் பிரிந்து சென்றுவிட்டார். நான் அப்போது எப்படியிருந்தேனோ அம்மாதிரியே இப்போதும் இருந்து வருகிறேன். மற்றவர்களைப்போல் அவர் இறந்தவுடன் அலறிப்புடைக்கவில்லை. அப்படிச்செய்ய வேண்டும் என்றும் தோன்றவுமில்லை. அன்று வைத்த அன்பில் இன்றளவும் என் நாதன்மேல் நான் வைத்த அன்பு அணுவாவது குறையவில்லை.

சம்ப்ரதாயப்படி நான் தலை மயிரை எடுத்துக்கொள்ள என் அண்ணாவிடம் மதிக்கவில்லை. ஆகவே நான் தாலிச்சரட்டை மட்டும் கழற்றிவிட்டு மற்றவைகளை அணிந்து கொண்டிருந்தேன். என் நாதன் இருந்திருந்தால் நான் இவ்வாறு படித்திருக்கமாட்டேன். அவர் இறந்ததும் என் தமையன் என்னை நானே காப்பாற்றிக் கொள்ளச் சக்தி உண்டாக்கிவிட நினைத்து, வீட்டில் வைத்தே யாவும் சொல்லித்தந்து ஒரு ஸ்கூலில் மெட்ரிக்குலேஷனில் சேர்த்தார்.

ஒருநாள் நான் தற்செயலாய் கடற்கரை வழியாய்ச் சென்றுகொண்டிருந்தேன். கமலேஸ்வரி ஒரு பேப்பரை காற்றில் பறக்க விட்டுவிட்டு பின்னாடியே ஓடி வந்தாள். நான் சட்டென்று அதை எடுத்து வைத்து. அவள் அருகில் வந்ததும் அவளிடம் கொடுத்தேன்.

அவள் என்னை அன்புவழிய பார்த்தாள். பின்னர், "தாங்கள் இருப்பது எங்கேயோ" என்றாள். என் விலாஸத்தைச் சொன்னேன். அன்றிலிருந்து நாங்கள் தினம் பீச்சில் சந்திப்போம். பின்னர்

இருவரும் சென்னை ராஜதானிக் கல்லூரியில் சேர்ந்தோம். இருவரும் இணைபிரியா நண்பரானோம்.

ரகுநாதன் அப்போது பி. ஏ. கிளாஸில் படித்துக் கொண்டிருந்தான். கமலேஸ்வரியின் தந்தையும் என் அண்ணாவைப் போல் ஒரு அட்வகேட் தான். ரகுநாதனும் ஒரு டிப்டி கலெக்டர் பிள்ளை.

ஒரு நாள் கமலேஸ்வரி என்னை அழைத்து "அக்கா! நான் ஒன்று கேட்கப்போகிறேன். நீ சரி என்றால் நான் சரி என்பேன். இல்லாவிடில் இல்லை" என்றாள்.

நான் சட்டென்று விஷயத்தை அறிந்து கொண்டேன். ஆகவே 'சொல்லு' என்றேன்.

"அப்பா எனக்குக் கல்யாணம் செய்யப்போகிறார். மாப்பிள்ளை இதில் தான் வாசிக்கிறார். நான் அவரை மத்யானம் காட்டுகிறேன்" என்றாள். நான் "மாப்பிள்ளையைப் பார்த்த பின்னர் சொல்லுகிறேன்" என்றேன்.

என்னிடம் ரகுநாதனைக் காட்டினார். நான் சொன்னேன். "கல்யாணம் செய்து கொள்ளப் போவது நீயேயன்றி நானல்ல. உன் மனதிற்கு மட்டும் பிடித்திருந்தால் உன்னைப் போல் அதிர்ஷ்டசாலி வேறில்லை என்பேன்" என்றேன். நான் அவ்வாறு சொன்னதில் அவளுக்குப்பரம திருப்தி.

கல்யாணம் நடந்தது. அவர் வக்கீலுக்கு படித்தார். உத்தியோகம் பார்த்தார். ஜட்ஜ் ஆனார். ரிட்டயர்டுமாகி விட்டார். பையன் ஒருவன் என்ஜினியராயிருக்கிறான். இரண்டு பெண்களில் ஒருத்திக்கு என் பெயர். நல்ல இடத்தில் சம்பந்தம். அவர்கள் ஆல்போல் தளிர்த்து க்ஷேமமாயிருக்க எப்பொழுதும் இறைவனை வேண்டுவேன், நிற்க!

கமலேஸ்வரி அந்த ஆச்ரமத்தை நடத்திவந்தாள். அவளுக்கு என்மேல் உயிர். எனக்கும் ஆறுமாதத்திற்கு ஒரு தரம் ரூபாய் அனுப்புவாள். நான் ஒவ்வொரு சமயமும், "கமலா நான் இப்பொழுது வேலையிலிருக்கிறேன். நான் கஷ்டப்படும்போது உன் உதவியைத் தான் நான் நாடுவேன்" என்று எழுதுவேன்.

நான் ஒரு ஹைஸ்கூலில் உபாத்தியாயினியாக இருந்தேன். எனக்கும் தலைமை உபாத்தியாயினிக்கும் எப்பொழுதுமே பிடிப்பதில்லை. எனவே அதன் மத்தியில் என் காலத்தைத் தள்ள முடியாதென நினைத்து இருபது வருஷம் உத்யோகத்தோடு சட்டென்று விலகிக் கொண்டேன் நான். அவ்வாறு எனக்கும் அந்தப் பாடசாலைக்கும் உள்ள பந்தத்தை அனுபவிப்பேன் என்று ஒருவரும் நினைத்திருக்கமாட்டார்கள்.

இப்பொழுதான், நான் கமலாவுக்கு எழுதினேன். கமலா உடனே, தன் ஆச்ரமத்தில் வந்து தலைவியாக இருந்து நடத்தினால் மிகுந்த உதவியாயிருக்குமென்று, பதில் எழுதினாள். நானும் உடனே வினாயூருக்குப் பிரயாணமானேன்.

2

"அடீ பெண்களா! இந்த அம்மா யார் தெரியுமா? இவர்கள்தான் என் அன்னை போன்றவர்கள். என்னைவிட மூன்று நான்கு வயதுதான் பெரியவர்கள். ஆனாலும் அவர்கள்தான் என்னை நல்வழிப் படுத்தியவர்கள். என்னோடு படித்தவர்கள். படிப்பில் அதிமேதாவி. அன்புள்ளவர்கள். உங்கள் எல்லோரையும் அன்போடு நடத்துவார்கள்; தெரிந்ததா? யாவரும் ஒழுங்காய் நடந்து நல்ல பேர் எடுக்க வேண்டும்" என்று என்னை பெண்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி வைத்தாள் ஸ்ரீமதி கமலேஸ்வரி.

"அக்கா, நீங்கள் இந்த, உன்குழந்தை கேட்டுக்கொண்டதற்காக வந்துவிட்டீர்கள். குழந்தைகள் தெரிந்தும் தெரியாமலும் செய்துவிடும். நீங்கள்தான் என்னை மன்னிப்பதுபோல் மன்னிக்கவேண்டும்" என்றாள் மீண்டும் கமலேஸ்வரி.

ஆச்ரமத்தில் மொத்தம் அறுபத்தேழு பெண்கள். யாவர் முகத்திலும் ஈச்வரன் அருள் பிரதிபலித்தது. சிலர் கைம்பெண்கள். சிலர் புருஷனால் தள்ளப்பட்டவர்கள். சிலர் கெட்ட வழியில்

இறங்கி தங்களைக் கெடுத்துக்கொண்டவர்கள். ஆனால் ஒருவராவது இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவரில்லை.

அறுபத்தேழு பெண்களை வைத்து நடத்துவது சாத்தியமான காரியமா? ஆயினும் என்னுடைய கொள்கை அன்பால்தான் வெல்லவேண்டும் என்பது. நாயனாரும்,

"அறத்திற்கே அன்பு சார்பென்பர்
அறியார் மறத்திற்கும் அஃதே துணை"

என்றிருக்கிறார் அன்றோ!

"நியமப்படி தங்கள் கடமைகளைச் செய்யத் தவறிய பெண்களைத் தண்டிப்பதில் யாதுபயன்? அவர்களைத் தண்டிக்கவா இங்கு சேர்த்துவைத்திருப்பது? செய்த குற்றத்திற்காக வருந்தச் செய்யவேண்டும்? இனிமேல் குற்றம் செய்யாதிருக்கும்படிச் செய்யவேண்டும். அன்பால் திருத்தினால் நெடுங்காலம் நிலைக்கும். கொடுமையால் திருத்தினால் பெயரளவில் திருந்துவார்களேயன்றி தலைமறைந்ததும் தூற்ற ஆரம்பிப்பார்கள்; பெண்கள் தானே" என்று நான் என் கீழுள்ள ஒரு உபாத்தியாயினியிடம் வாதிப்பேன்.

3

பெண்களில் உமாதான் எனக்கு நிரம்பவும் பிடித்தவள். நாளடைவில் இந்தப் பிடிப்பு அவளை நான் என்றும் மறக்க முடியாத ஒரு அன்பாகமாறியது. இதற்காக நான் வருந்தியிருந்ததும் உண்டு. யாவரையும் ஒன்றாகப் பாவித்து நடத்த வேண்டிய பொறுப்பை வாய்ந்த ஒரு அம்மா ஒரு குழந்தையிடத்தில்மட்டும் அளவற்ற அன்பு செலுத்தினால்......" என்று சிந்தித்திருக்கிறேன். ஆனால் மற்ற குழந்தைகளிடத்து நான் அன்பு காட்டாமல் இல்லையே...என்னமோ ஈச்வரா? எனக்கும் உமாவுக்கும் மத்தியில் உண்டான இந்த அன்பை யாராயிருந்தாலும் பியர்த்தெரிய முடியாது என்றாயிற்று. ஆனால் உமாவின்மேல் அநேக புகார்கள் உண்டு.

உமா கட்டமைந்த ஒரு பெண். அதிக சிவப்பல்ல. அவள் முகத்தில் எப்பொழுதும் குறு குறுப்பு இருந்து கொண்டே இருக்கும். வயதோ பதினைந்து அல்லது பதினாறேதான் இருக்கும். யாரிடமும் அன்பாகப் பேசுவாள். ஆடவர்கள் அவளிடத்தில் பேசினால் கட்டாயம் சொக்கிப் போய்விடுவார் என்பதில் சந்தேகமேயில்லை. இதோடு இயற்கையாகவே அவள் சங்கீதத்தில் வல்லவளாயிருந்தாள்.

இவள் ஆச்ரமத்தில் சேர்ந்தவிதமே பல கதைகளையுடையது. உமா ஒருவனோடு ஓடிப்போய்விட்டாள் என்றும், பின்னர் உறவினர்கள் இந்த ஆச்ரமத்தில் சேர்த்தனர் என்பதும் ஒரு கதை.

ஒருநாள் நான் அவளுடைய கதையை மெதுவாக விசாரித்தேன். யாராயிருந்தாலும் என்னிடம் உண்மையைச் சொலத் தயங்கார்கள். அவ்விதமே உமா தன் கதையைச் சற்று விரிவாகவே சொன்னாள். அதன்படி அவள்மேல் தப்பெதுவும் இல்லை; பேதைப் பெண். அவள் பெற்றோர்கள் சம்சாரபந்தத்தில் அவளைத்தள்ள நினைத்ததின் பயன் அது. ஆகவே நான் அவளுக்கு உலக இயல்பையும், உலகில் ஆடவர் மகளிரை எப்படி நடத்துகிறார்கள் என்பதையும், கொடிய ஆடவர்கள் மத்தியில் அவளைப்போன்றார் எந்த மாதிரி நடந்துகொண்டு ஈசன் அருளை அடைய வேண்டுமென்பதையும் எடுத்துச் சொன்னேன். அப்பொழுது உமா கண்களில் நீர் துளித்தது. "அம்மா எனக்கு உலகில் கதி எதுவுமில்லை. என் பெற்றோர்களிடத்து ஒற்றுமை இல்லை. என் தந்தை ஒரு வியாதியஸ்தர். இந்த நிலையில் நானே என் பிழைப்பைத்தேடிக் கொள்ளவேண்டும். நான் என்னை உங்களிடத்தில் ஒப்புவித்து விடுகிறேன். என்னை நல்வழிப்படுத்துவது உங்கள் கடமை" என்றாள்.

ஆனால் உலகம் உமாவை புறக்கணித்தது என்றுதான் நான் சொல்லுவேன். ஒவ்வொரு உபாத்தியாயினியும் உமா பேரில் குற்றம் கொண்டு வரலாயினர். குற்றமும் பிரமாதமாயிருக்காது. "அவள் சிரித்துவிட்டாள்" என்பது ஒரு குற்றம். அவள் பின்னலை முன் தூக்கிப்

போட்டிருந்தாள் என்பது ஒரு குற்றம். நான் அவர்களை மனதிற்குள் வெறுத்தேன். உமாவை ஆச்ரமத்தை பரிபாலனம் பண்ணும் ஒவ்வொருவரும் வெறுத்தனர். ஏன்? கமலேஸ்வரிகூட அவளைப் பற்றி நல்ல அபிப்பிராயம் என்னிடம் சொல்லவில்லை. ஆகவே அந்த அநாதைக் குழந்தைக்கு என்னையன்றி வேறு யாரும் கதியில்லை. இது அவள் ஜாதகம்.

4

பராசக்தி உமாவைப்போல் எனக்கு மற்றொரு மகவை அளித்தாள். அவன் ஸ்ரீமான் ரகுநாதருக்கு நிறம்பவும் வேண்டியவன். அவர் தயவினாலேயே அவன் பட்டம் வாங்கினான். வயது இருபத்திரெண்டு இருக்கும்.

ரகுநாதர் அந்தப் பையனை ஒரு நாள் என்னிடம் அழைத்து வந்து அறிமுகப் படுத்திவைத்து "அம்மா இந்தப் பையனை தங்கள் பெண்களுக்கு இங்கிலீஷ் சொல்லித்தரச் செய்யலாமா" என்றார்.

நான் யாரையும் எளிதில் நம்புவேன். ஆனால் நான் பராசக்தியின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நம்புவனேயானால் அது சரியாயிருக்கத் தப்பாது. எனவே "தாராளமாய்" என்றேன். இருந்தாலும் உலகத்தின் கண்கள் அவன் பாடம் சொல்லித்தர சம்மதிக்குமோ வென அஞ்சினேன்.

அட்வான்ஸ் கிளாஸில் மொத்தம் இருபது பெண்கள். அவர்களில் உமாவும் ஒருத்தி. அவர்களுக்குத்தான் ஷண்முகநாதன் பாடம் சொல்லித் தந்தான்.

ஒருநாள் மாலை அவன் என்னிடம் வந்தான். உமாவைப்பற்றி புகார் சொல்ல ஆரம்பித்தான். பழைய புராணம்தான். "அவள் வகுப்பில் சிரிப்பதனால் வகுப்பை நடத்த முடியவில்லை," என்று சொல்லி விட்டுப் போனான்.

உமாவின்மேல் நான் எவ்வளவு அன்பு செலுத்தினேனோ அவ்வளவு அன்பு, அதற்குமேல் அன்பு, ஷண்முகநாதன் மேல் செலுத்தினேன் என்றால் அது மிகையாகாது. நாளடைவில் ஷண்முகநாதன் என் முழு அன்புக்கும் பாத்திரனானான். ஆகவே உமாவின்மேல் அவன் புகார் சொல்லுவதும் அது அவளுடைய விதியேயன்றி வேறில்லையென்று தீர்மானித்துக் கொண்டேன்.

5

கோடை காலம் வந்தது. நான் கமலேஸ்வரியிடம் எனக்கு ஒருமாதம் லீவு வேண்டுமென்று கேட்டேன். நான் சில வருஷங்களில் கோடையில் குற்றாலத்திற்குச் சென்று வந்திருக்கிறேன். எப்பொழுதும் என் வேலைக்காரி ஒருத்தியோடுமட்டும் தனியாய்ச் செல்வேன். ஆனால் இப்போது உமாவையும் என்னோடு அழைத்துச் செல்வது என்று தீர்மானித்தேன். கமலேஸ்வரியும் செலவுக்கு வேண்டிய பணத்தோடு உத்தரவு கொடுத்தாள். உமாவுக்கு என்னோடுவருவதுபற்றி அளவற்ற சந்தோஷம். ஆனால் அன்று மாலையில் ஷண்முகநாதன் என் விடுதிக்கு வந்தான். அவன் முகம் ஜோதியை இழந்திருந்தது. "ஏண்டா உன் முகம் இப்படியிருக்கிறது" என்றேன்.

"ஒன்றுமில்லை அம்மா" என்றான். சற்றுநேரம் இருந்துவிட்டுச் சென்றான். என் அன்புக்குப் பாத்திரமானவர்கள் அவ்வாறு சோகத்தால் மூடுண்டு கிடப்பதை நான் காணச் சகியேன். ஆகவே ஷண்முகநாதனுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு, "அவன் வருத்தத்திற்குக் காரணம் யாதாயிருக்கலாம்" என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

அவன் வந்தான். நான் கேட்டேன். தன்மனம் சரியான நிலையில் இல்லையென்றும் அதற்குக் காரணம் தனக்கே தெரியவில்லை யென்றுமட்டும் சொன்னான். ஷண்முகநாதன் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவனல்ல. தன் சுய முயற்சியினாலும், ஸ்ரீமான் ரகுநாத சர்மாவின் உதவியினாலும்தான், அவன் படித்தவன். அவன் வீட்டில் அவனுக்குத் தகுந்த உதவி கிடையாது. நானும் அப்போது அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை.

குறிப்பிட்ட தினத்தன்று நாங்கள் வில்லூர் ஸ்டேஷனிலிருந்து 8-45 க்கு புறப்படும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் பிர

யாணமானேம். யாவரும் சந்தோஷமாக வழியனுப்பினர். ஸ்டேஷனுக்கு ஜட்காவில் எங்களோடு ஷண்முகநாதன் மட்டும் வந்தான். அவன் முகத்தை அப்போது பார்க்க வேண்டுமே! பேயாலறையப்பட்டவன் போல் காணப்பட்டான். என் மனம் குழப்பம் அடைந்தது. ஒரு சமயம் அவனும் என்னேடு வர அவாவுற்றிருக்கின்றனே என்னவோ என்று நினைத்து, "நீயும் எங்களோடுவர விருப்பமா?" என்றேன்.

"நான் சர்மாஜீயிடம் கேட்கவில்லையே" என்றான். அவனே டிக்கட்டுகள் எடுத்தான். வசதியான வண்டி ஒன்றில் அவனே ஏற்பாடு செய்தான். அவனைப் பிரியவிருக்கும் வருத்தம் எனக்கும் கடவுளுக்குமே தெரியும்.

வண்டி புறப்படும் சமயம் அவன் கண்களினின்றும் இரு துளிகள் தரையிற் சிந்தின. அப்போதுதான் நான் சட்டென்று ஒரு பத்து ரூபாய் நோட்டை யெடுத்து, அவனிடம்கொடுத்து, "இந்தா செலவிற்கு வைத்துக்கொள் அடிக்கடி கடிதம் எழுது," என்றேன். அதை வாங்கிக்கொண்டான்.

வண்டி புறப்பட்டது. உமா எதிர்ப்புறத்து ஜன்னல் வழியாக தூரத்தில் உதயமாகிவரும். சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களில் தேங்கிக்கிடந்த ஜலம் சந்திரிகையிற் பட்டு பளபளவென்று பிரகாசித்தது. அவைகளுக்கு விடுதலையளிக்கும் பொருட்டு கண்களைச் சட்டென்று மூடினாள். கண்ணாடி போன்ற அவளது கன்னங்களில் முத்துக்கள் போன்று உருண்டோடின கண்ணீர்த் துளிகள்

"ஏன்...... உமா......" என்றேன்

"அம்மா" என்றாள். அந்தக் குரல், விம்மலும் பொருமலும் நெரித்த தொண்டையின் வழியாய் வந்தது.

"நீ... ஏன்......"

"இல்லையம்மா அவரைப் பார்க்கத்தான் என் மனம் கேட்கலை... அவர் அழுவதைப் பார்க்க என் மனம் பொறுக்க வில்லையம்மா" என்றாள்.

இப்பொழுது என் மூளை பலமாக வேலை செய்ய ஆரம்பித்தது. ஒரு சமயம் அந்த "வையம் படைக்கும் மதன் இவர்கள் மத்தியில் ஏதாவது ஒரு விதையைப் போட்டுவிட்டுச் சென்று விட்டானே" என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

"உமா... நான் ஒன்று கேட்கிறேன். நீ அதற்குத் தகுந்த பதில் சொல்லியாக வேண்டும்" என்றேன்.

"என்ன அம்மா அது" என்றாள். நான் சுருண்டு அவள் முகத்தின் முன்னால் தொங்கிக்கொண்டிருந்த அந்தக் கேசத்தை விலக்கிக்கொண்டே உன்னிடம், "ஷண்முகநாதன் ஏதாவது பேசியிருப்பானா?" என்றேன்.

அவள் முகம் பலவித உணர்ச்சிகளைக் காட்டிற்று. கட்டாயப்படுத்தப் பட்டவள் போல், "ஆமாம்..." என்றாள்.

மேலும் நான் பேசவில்லை. உமாவைப் பற்றி என்னிடமே புகார் சொன்னவன் எப்படி அவளை விரும்பினான்.

"நீ ஏதாவது சொல்லியிருக்கிறாயா?"

"இல்லை... ஆ... சொல்லி யிருக்கிறேன். அவர் உயர்ந்த ஜாதி ஆகையால் என்னை நினைப்பது சரியல்ல வென்றும் நான் கெட்டுப் போனவள் என்று யாவரும் சொல்வதால் அவர் என் அபவாதத்தை ஏற்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்."

"அவனேடு பேச உனக்கு எப்படிச் சந்தர்ப்பம் கிடைத்தது..."

"நான் அவரோடு பேசவில்லை. ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்து விட்டேன்."

"பின் ஏன், நீ அவனை நினைத்துக் கலங்க வேண்டும்."

"நான் அப்படிச் சொன்னாலும் என் மனம் அவரை அடைந்து விட்டது."

"நான் ஆடவர் சாமர்த்தியங்களைப் பற்றி உன்னிடம் எவ்வளவோ சொல்லியிருக்கிறேனே."

"ஆம் அதை நினைத்துதான் நான் அவ்வாறு பதில் அளித்தேன்."

"சரி இப்போது உன் முடிவென்ன.?"

"என் முடிவென்ன? நான் ஒன்றும் செய்வதற்கில்லை. தாங்களே என்..."

"நீ அவனை மணந்து கொள்வாயா ?"

அவள் உள்ளத்திலெழுந்த உவகையை முகம் பளீரென்று எடுத்துக் காட்டிற்று. நான் அதை கண்டுகொண்டேன்.

"சரிதான்" என்றேன்.

6

உமாவுக்கும் ஷண்முக நாதனுக்கும் பராசக்தி முன்னிலையில் விவாகம் ஆயிற்று. ஆகி இப்போது ஐந்து வருஷம் ஆகிவிட்டது. உமாவின் அதிர்ஷ்டமோ என்னவோ அரசாங்கத்தில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் ஆயிற்று அவனுக்கு அவர்கள் டெல்லியில் இருக்கின்றனர்.

* * *

இதோ உமா டெல்லியிலிருந்து எனக்கு அனுப்பிய கடிதம்.

புதிய டெல்லி

அம்மாவுக்குத் தங்கள் குழந்தை உமா நமஸ்காரம். அம்மா.. இங்கு நாங்கள் அம்மாவின் அருளால் க்ஷேமம். தங்கள் உடம்பு சவுக்கியமா? கடந்த இரண்டு வாரமாய் தாங்கள் ஏன் கடிதம் எழுதவில்லை? என்னை அவர் தினம் தங்களுக்குக் கடிதம்போட தொந்திரவு செய்கிறார். கங்காதேவியை நான் சிக்கிரத்தில், தங்களிடம் காட்டுவேன். அவள் தங்கள் பெயரைப் பெற்றிருப்பது போல தங்கள் முகத்தையும் பெற்றிருக்கிறாள். தங்களைப்போலவே சிரிக்கிறாள். கமலேஸ்வரி அம்மாவுக்கும் ஆச்ரம மாணவிகளுக்கும் என் நமஸ்காரத்தைச் சொல்லுங்கள். நீங்கள் எப்போது இங்கு வருவீர்கள். அவர் நாளை தங்களுக்குக் கடிதம் எழுதுவார். குழந்தை தங்கள் படத்தைத் தினம் நமஸ்கரிக்கிறது.

தங்கள் குழந்தையும்
அவள் குழந்தையும்
உமா
கங்காதேவி

உமாவின் வாழ்வு விடிந்தது. உமா ஒரு எறும்புக்குக்கூடத் தீங்கிழையாதவள் என்பது நான் ஒருத்திதான் அறிவேன்.

"நல்லறம் செய்தோர் நல்லுலகடைதலும்
அல்லறம் செய்தோர் அருநரகடைதலும்"
இயல்புதானே!



மயிர் உதிர்வதை உடனே நிறுத்தாவிட்டால் வழுக்கைத் தலைதான்

இன்றே

கெஸ்ரைன்

வாங்கி, உங்கள் கேசத்தை அழகு படுத்துங்கள்

ஒரு புட்டி 12 அணா

எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்

விக்டோரியா டிபோ

வடக்கு மாடவீதி, மைலாப்பூர்

சென்னை.

பூஞ்செடி மோகினி

(டி. ராஜகோபாலன்)

என் பரீக்ஷை ரிஸல்ட் தெரியும் முன்னமேயே—என்—பரீக்ஷை முடிந்து ஹாலைவிட்டு வெளியே வந்த உடனே—இன்னும் ஒரு வருஷம், அதே பி. ஏ. கிளாஸில் படிப்பது என்று நிச்சயம் செய்துவிட்டேன். எவ்வளவு கொஞ்ச நம்பிக்கை இருந்ததோ, அதுவும் ரிஸல்ட் தெரிவதற்கு முந்திய நாள், சூரியன் எதிரில் பனிபோல், மறைந்து விட்டது.

அன்று இரவுமுதல் விடாமல் வாசிப்பது என்று நிச்சயித்துக்கொண்டு இறைந்து கிடந்த புத்தகங்களை அடுக்கினேன். சாயங்காலம், அந்தி வெயிலாக மாறிவிட்டது. அந்தி வெயில் இரவாக மாறிவிட்டது. ஆனால் தலையைத் திருப்பிப் பார்த்தபோது மணி 9½ ஆகியிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அதி சீக்கிரத்தில் போஜனத்தை முடித்துக்கொண்டு, மேஜையை யணுகிய போதுதான், "அன்று இரவு என்ன வாசிப்பது" என்ற கேள்வி உதித்தது. மணி 10½ வரை யோசித்து நிச்சயம் செய்தபிறகு சயன்ஸ் புத்தகத்தை எடுக்கக் கையை நீட்டினேன். கை எடுக்க மறுத்தது. சமாளித்துக்கொண்டு அதை இழுத்துப் படிக்க ஆரம்பித்தேன் எல்லா பாடங்களும் பழைய பாடங்களே. படிக்காமலே பரீக்ஷை எழுதலாம் என்று தோன்றிற்று. புத்தகத்தை எறிந்து விட்டு சரித்திரபுத்தகத்தை எடுத்தேன். ஆனால் கண்கள் என்னை அறியாமலேயே மூடிக்கொண்டன. கொஞ்சநேரம் கழிந்த பிறகு அந்த சரித்திர புத்தகத்தையும் வீசி எறிந்த பிறகு கண்கள் திறந்தன. பிறகு ஸம்ஸ்கிருத புத்தகத்தை எடுத்து சில சுலோகங்களைச் சொன்னேன். ஆனால் மூளை வேலை செய்யாமலிருக்கையில் படித்து என்ன பயன்? முன் புத்தகங்கள் பட்டபாட்டை அதுவும் பட்டுத் தீர்த்தது.

மணி 11 அடித்தது. வெளியில்போகும் பொருட்டு தோட்டத்திற்குள் நுழைந்தேன். எங்கும் தங்கமயமான நிலவு. தலைக்குமேல் மினு மினுக்கும் நக்ஷத்திரங்கள். ஒரே நிச்சப்தம். எனக்கோ ஓர் பக்கம் ஆனந்தம்; மற்றோர் பக்கம் பயம். என் கடியாரத்தின் "டிக், டிக்" சப்தத்தைத் தவிர வேறெதுவும் கேட்கவில்லை. ஓர் புதரண்டை,—புதர் அல்ல, அடர்ந்தபூஞ்செடி—போனேன். அடுத்த வினாடி என் கால்கள் எவ்வளவு வேகமாக ஓட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடின. அறையின் கதவைத் தாளிட்டேன். காற்று புகா வண்ணம் ஜன்னல்களை மூடினேன்—என் புதரிலிருந்து யாரோ, ஆடிக்கொண்டு, என்னை நோக்கி முழித்ததை என் கண்கள் பார்த்து விட்டன—அவ்வளவுதான். என் கட்டிலின் மேல் சாய்ந்து பெருமூச்சுவிட்டேன்; போர்வையால் தேகத்தை மூடிக்கொண்டேன். மனைவியின் ஞாபகம் வந்தது. கண், கண்ணீர் விட்டது. தலை சுழன்றது. உடம்பு வியர்த்தது. "ஆகா" என்றேன். என் அறையில் அதே அறையில் - ஏதோ சப்தம் கேட்க என் உயிரில் பாதி போய் விட்டது. தலையை நீட்ட தைரியமில்லை. ஆனால் அச் சப்தம் பலமாகக் கேட்கவே, உயிரை திரணமாக மதித்து, ஓடி கதவைத் திறக்கப்போனேன். என்ன சப்தம்! என் கடியாரத்தில் அலாரம் மணிதான்! அதை நிறுத்தி விட்டு மறுபடி படுக்க, என் அன்பின் ஞாபகமே வந்தது. புரண்டு புரண்டு அழுதேன். என்ன பயன்! "மாண்டவள்வருவாளா" என்று சொல்லி வாய் மூடும் முன் ஜன்னல் கதவு (காற்றால்) திறந்து கொண்டது. மறுபடியும் நடுக்கம்தான். பல எண்ணங்கள் மின்னலைப் போல் தோன்றி மறைந்தன. என் அறையில் யாரோ, சிரிக்கும் சப்தம் கேட்டது. தலையைத் திருப்ப, யாரும்

தென்படவில்லை. கதவை இழுக்க, திறக்க முடியவில்லை. "ஹா! ஹா! ஹோ!......" என்ற சப்தம் கேட்டது. "ஆம் அவளுடைய சிரிப்புதான். அவளது குரல் தான்" என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டு பித்துப் பிடித்தவன்போல் அங்குமிங்கும் ஓடி விளக்கை ஏற்றினேன். இரண்டு பெரிய கண்கள் என் பக்கம் வந்து என்னை அணைத்துக் கொண்டன. "என்னை நீ பார்க்க விரும்புகிறுயா? நான்தான் உன்—" என்றது அக்குரல். நான், "சரி" என்றேன். அவள், "விளக்கை அணை" என்றாள். நான் பயத்துடன் "மாட்டேன்" என்று உளறினேன். அவள் என்னைத் தழுவினாள். ஆனால் அவள் கையைப்பிடித்து என் தோள் மேல் அமுக்கும் முன், நகர்ந்து விட்டாள். "ஆகா! என்ன ஆனந்தம்! அதே வாசனை! நான் வாங்கிக்கொடுத்த ஸ்னோ, பௌடரின் வாசனைபோலிருக்கே" என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் என் தேகம் சுவரில் மோதிக்கொண்டது. ஆனால் எனக்கு சப்தம் போட தைரியம் இல்லை. ஓர் சுவர் போல் தட்டையாயும், உயிரற்றும் நான் போய் விட்டதாக எண்ணினேன். "நாளைக்கு நீ பரீக்ஷையில் தே......" என்று சொல்லும்போது காலை, மணி 5 அடித்தது. அவள் சூரிய வெளிச்சத்தினிடம் உள்ள பயத்தால், மறைந்துவிட்டாள். என் றிஸல்டையாவது சொன்னாளா? அதுவும் இல்லை. என் கண்களிலிருந்து ஆறுபோல் பெருகின கண்ணீர், சட்டையை நனைத்தது. "ஹா! சாரதா! என்னை மறந்தனையா? ப்ரியே! என் உயிர், என் இரத்தம்! என் ஹிருதயம்—உன்னுடையவையே! ஒவ்வொரு நாளும் காலேஜுக்குப் போகும்போது என் தலை மறையும்வரை, சிரித்த முகத்துடன் என்னைப் பார்த்தவண்ணமே இருப்பாயே. உன் அன்பு—உன்—அன்பு—எனக்குத் தெரியும். மறுபடியும் உயிருடன், உன்னை எப்போது காண்பேன்! சாரதா, சா—ர—தா—" என்று சொல்லிக்கொண்டே படுக்கையில் சாய்ந்தேன்.

காலை 8 மணிக்கு திடுக்கிட்டு எழுந்திருந்து, ஜன்னல் வழியாக விழுந்த பேபரை பார்த்தேன். கண்களை கண்ணீர் மறைத்தது. அழுகையை ஆனந்தத்தால் அடக்க முடியவில்லை. உடனே தந்தி ஆபீசுக்கு ஓடி, கிராமத்திலிருக்கும் என் தந்தைக்கு ஓர் தந்தி அடித்தேன். திரும்புகையில் கோயிலில் ஆஞ்சனேயருக்கு கற்பூர தீபாராதனை பூஜை முதலியவைகளை முடித்து மூன்றுதரம் அக்கோயிலை பிரதக்ஷணம் செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன்.

* * *

"தொப்" என்று கீழே விழுந்தேன் ஆகா! எப்பேற்பட்ட கனவு!

ஐ. ஸி. எஸ். மாமா

(ஆர். ஜயலக்ஷ்மி)

அன்று தீபாவளி. விடிந்து இரண்டு ஜாமமாகியும்கூட "டப, டபா, பட, படா" என்ற படாஸ் வெடிக்கும் சப்தமும், மத்தாப்பு வாசனையும் குறைந்தபாடில்லை. எங்கும் ஒரே கோலாகலம். குழந்தைகளின் கேலிக்கூத்திற்கும், பெரியவர்களின் பேரானந்தத்திற்கும் அளவே இல்லை. நிமோனியா கடும் ஜுரத்தால் பீடிக்கபட்டு அப்பொழுதுதான் குணமடைந்துவரும் துரைசாமி-தனது அறையில் படுக்கையில் புரண்டவாறு, தான் எட்டு வருடங்களுக்குமுன் அனுபவித்த தீபாவளிக் கொண்டாட்டத்தைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்திருந்தான். அதுதான் அவன் கடைசியாக கொண்டாடிய தீபாவளி. அதற்கடுத்த வருஷமே அவன் இங்கிலாந்து சென்றுவிடவே, அப்பொழுதிலிருந்து இதுவரைக்கும் அவன் தீபாவளி பண்டிகை கொண்டாடவே இல்லை. அவன் இங்கிலாந்து செல்வதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பே ஏற்கெனவே தாயை இழந்திருந்த துரைசாமி தந்தையையும் இழந்தான். அதற்கப்புறம் இரண்டு தீபாவளிக்கு மட்டும் கிராமத்தில் வசித்துவரும் அவனது தமக்கை அவனை பண்டிகைக்கு அழைத்தாள்.

சென்னையில் பி. ஏ. படித்துக்கொண்டிருந்த துரைசாமி அக்காவின் குழந்தை சுந்தரிக்கென்று பட்டுப் பாவாடையும், பட்டாசு, மத்தாப்புகளும் வாங்கிக்கொண்டு பூங்காவனம் கிராமம் செல்வான். வீட்டில் நுழையுமுன்பு சுந்தரி ஓடிவந்து துரைசாமியின் காலைக் கட்டிக்கொண்டு "மாமா, மாமா, சீன வெடி வாங்கிண்டு வந்திருக்கையா? விஷ்ணு சக்கரம் கொண்டு வந்திருக்கயா?" என்று ஐம்பத்தெட்டு கேள்விகள் கேட்பாள். கிழிச சீட்டிப்பாவாடையும், சொக்காயையும் உடுத்திக் கொண்டு, வரட்ட தலையும் தானுமாக காட்சியளிக்கும் சுந்தரியின் உருவத்தை இப்பொழுதும் பிரத்தியக்ஷமாக காண்பதாக உணர்ந்து துரைசாமி புன்முறுவல் பூத்தான். ஆனால் சேற்றிலுதித்த கமலம் போலிருந்த அப்பட்டிக்காட்டுச் சிறுமியின் வசீகரமான, மாசற்ற சுந்தர வதனத்தில் ஓர்வித ஆனந்த உணர்ச்சியை பெற்றான் துரைசாமி. ஆனால் அந்த உணர்ச்சி இன்றுதான் பளிச்சென்று தெரிய வந்தது அவனுக்கு! அக்களங்கமற்ற அழகிய வதனத்தை துரைசாமி நினைத்துக் கொண்டு அவளுடன் தானும் சேர்ந்து பட்டாசு, மத்தாப்பு கொளுத்தி கேலிக்கூத்தடித்துவிட்டு, எண்ணெய்தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்து, கோடியுடுத்தி, தனது தமக்கை அன்புடன் பரிமாறிய ருசிகரமான பண்டிகை சமையலை புசித்து ஆனந்தமாகக் கழித்த அந்த நன்னாளை இன்றும் விரும்பினான் துரைசாமி.

அவன் தன் தமக்கையையும், சுந்தரியையும் "வருஷக்கணக்காக போய் பார்க்காமலிருந்துவிட்டோமே" என்று இன்று வருந்தினான். இப்பொழுது தான் நோய்வாய் பட்டிருக்கையில் அவர்கள் அருகிலிருந்தால் தனக்கு எவ்வளவு உபசாரம் செய்திருப்பார்கள். தான் எவ்வளவு நிம்மதியாக இருந்திருக்கலாமென்று நினைக்கலானான். தனிமையை வெறுத்தான். அப்பொழுது, தான்செய்த தவறுகள் ஒன்றொன்றாக நினைவிற்கு வந்தன. அவன் அக்காவிற்கு சுந்தரி குழந்தையாக விருக்கும் பொழுதே, அவளை அவனுக்கு கொடுக்க வேண்டுமென்ற உத்தேசம் இருந்துவருவதை அவன் அறிந்திருந்தான். ஆனால் துரைசாமி இங்கிலாந்திற்குச் சென்று ஐ. ஸி. எஸ். பரீக்ஷை பாஸ் செய்தபின்பு அந்த நாட்டுப்புறத்து

ஏழையை, அநாகரீகமான சுந்தரியை மணக்க அவனது மனம் ஒப்பவில்லை.

அவன் தமக்கை காமாக்ஷி இங்கிலாந்திலிருக்கும் துரைசாமிக்கு அடிக்கடி முருக்கு, முத்துசாரை, பொருவிளங்காய் உருண்டை, திரட்டிப்பால் என்று தினுசு தினுசான தின்பண்டங்களை பையனுக்கு வாய் அலுத்திருக்குமென்று பார்சல் செய்வாள். அத்துடன் "நீ எப்பொழுது இந்தியாவிற்குத் திரும்பி வரப்போகிறாய்? நம் குட்டி சுந்தரி எப்பொழுதும் உன் நினைவாகவே இருக்கிறாள். அவள் உன்னைத்தான் கலியாணம் செய்துக் கொள்ளப் போகிறாளாம்......" என்றும் "துரைசாமி! சுந்தரி, அடேயப்பா இப்பொழுது எவ்வளவு வளர்ந்து விட்டாள் தெரியுமா! கோடியாத்து ஜானகியைக் கூட உயரத்தில் தோற்கடிக்கிறாள்! இப்பொழுது நீ அவளை வந்து பார்த்தால் அடையாளமே கண்டு பிடிக்க முடியாது! இந்த தடவை அனுப்பியிருக்கும் திரட்டிப் பாலை அவளே உனக்கென்று ஒரு நாளெல்லாம் அடுப்பங் கரையில் உட்கார்ந்துகொண்டு காய்ச்சினாள் பாவம்! முருக்கும் அவள்தான் சுற்றினாள்! பாக்கு பொடியும் உனக்கென்று ஸ்பெஷலாக செய்து அனுப்பி இருக்கிறாள். ஜாஸ்தி எழுதுவானேன்? இந்த தடவை அனுப்பி இருக்கும் பணியாரம் அவ்வளவும் அவளுடைய சொந்த தயாரிப்பு தான். ஆனால் உனக்கு கடிதம் எழுதுவதற்குமட்டும் வெட்கப்படுகிறாள்." என்றெல்லாம் தம்பிக்கு கடிதமெழுதுவாள். துரைசாமி அவற்றை வாசித்த உடன் "சி, இந்த நாட்டுப்புறக் கழுதைக்கு என்ன துணிச்சல்! காத்திண்டிரு, உன்னை வந்து கலியாணம் செய்து கொள்கிறேனென்று" என்று எண்ணியவாறு கடிதங்களை சுக்கு நூறாக கிழித்தெரிந்து விடுவான். இப்பொழுது இவைகளை எல்லாம் நினைக்க நினைக்க துரைசாமியின் கண்களில் கண்ணீர் தளும்பிற்று. "ஏன் நாட்டுப்புற பெண் என்றால் அவளுக்கு மட்டும் ஹிருதய மில்லையா? காதலிக்கும் திறன் இல்லையா? புத்திசாலித்தனமில்லையா, சௌந்தரியம்தான் இல்லையா?" என்று தன்னைதானே பல கேள்விகள் கேட்டுக் கொண்டான்.

அவன் இந்தியா திரும்பியதும் உத்தர தேசத்தில் வேலைக்கு அமர்த்தப் பட்டான். தற்பொழுது டெல்லி செக்ரடேரியட்டில் வேலை பார்த்து வருகிறான். வேலையில் சேர்ந்த பொழுதிலிருந்து தமக்கையையும், சுந்தரியையும் பார்த்து வரவேண்டுமென்று அவனது மனம் ஒரு புறம் தூண்ட, அடுத்த நிமிஷமே தன்னை கண்டவுடன் தனது தமக்கை தன்னை அந்த அநாகரீக பொக்கிஷமாகிய சுந்தரியை கலியாணம் செய்துகொள் என்று வற்புறுத்துவாளே என்ற பயமும் துரைசாமிக்குத் தோன்றும். தன் தமக்கையின் வற்புறுத்தலை தட்டமாட்டாமல் நாகரிக சிகரமென்ற ஐ.ஸி.எஸ்.உத்தியோகத்தை வகிக்கும் தான், சுந்தரியை மணக்க நேரிட்டால் தனது நாகரீக நேயர்கள் தன்னை என்னவென்று நினைப்பார்களென்ற அவமானமே துரைசாமியை அதிகமாக வாட்டியது. இவ்வளவு நாட்கள் யோசனைகளனைத்தும் இன்று துரைசாமியின் மனதில் சினிமா படம்போல் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றின. ஆதலால் சுந்தரிக்கு கலியாணமாகி புக்ககம் போன பிறகு தான் நிதானமாக தமக்கையை பார்த்து வரலாமென்று தன் பயணத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டு வந்ததை நினைத்து துரைசாமி இன்று மனமுருகினான். உடம்பு வாசியானவுடன் பூங்காவனம் சென்று தமக்கையைப் பார்த்து வருவது தான் தனது முதல் வேலை என்று நிச்சயித்துக்கொண்டான்.

அவனுக்கு இதுகாறும் உற்றதுணைவி ஒருவரும் கிடைக்கவில்லை. நம் நாட்டுப் பண்டிகை பருவங்களை கொண்டாடுவதே ஓர் இளப்பமென்று இதுகாறும் கருதியிருந்த துரைசாமிக்கு இன்று நாட்டிலனைவரும் தீபாவளி கொண்டாட, தான் மட்டும் பண்டிகை கொண்டாடக் கொடுத்துவைக்கவில்லையே என்று தனது அருமைத் தமக்கையையும், சுந்தரியையும் நினைத்து நினைத்து மனம் உருகினான்.

தான் காலேஜில் வாசிக்கும்நாளே பிடித்து போட்டோ பிடித்து சொருகி இருந்த (Album) புத்தகத்தை அருகிலிருந்த மேஜை மீதிருந்து எடுத்து ஒரொரு ஏடாகப் புரட்டி சுந்தரியின் படங்களைக் கண்டுகளித்தான். அந்த களங்கமற்ற குழந்தை உள்ளத்தில், அவளுக்கு தன்மேலிருக்கும் அளவற்ற ப்ரேமையை, தன்னை பார்த்து சிரிக்கும் ஓர் சிரிப்பிலேயே அவள் தெளியப்படுத்தும் திறமையை, இன்றுதான் துரைசாமி நன்குணர்ந்தான். அவன் ஹிருதய கமலத்தில் சாம்பலால் மூடப்பட்ட தணலாகவிருந்த காதல் இன்றையதினம் தனிமை என்ற காற்றால் வீசப்பட்டு பளிச்சென்று பிரகாசித்தது. தான் அவளுக்கு தீபாவளிக்கென்று வாங்கிவந்த பாவாடையை உடுத்திக்கொண்டு தனக்கு வந்தனம் கூறுவதைப்போல் அவள் மற்றொரு படத்தில் கொஞ்சலாக சிரித்துக் கொண்டு நிற்பதையும், மற்றொரு காட்சியில் தான் வாங்கித்தந்த மத்தாப்புக் குச்சிகளை அவள் ஆனந்தமாக கொளுத்திக்கொண்டிருப்பதையும், அவனுக்கு பார்க்க பார்க்க தன்னையுமறியாமல் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. தனது படாடோபமான டாம்பீக வாழ்வையும், அச்சிறுமியின் ஆனந்தமயமான வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்து வெட்கினன். "ஆம், சுந்தரி இப்பொழுது யாரை மணந்து விட்டனளோ? அவளுக்கு இப்பொழுது மக்கட்பேறுகூட இருக்கக் கூடுமே" என்பதை நினைக்க துரைசாமிக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. அவ்விதம் அவளுக்கு விவாகமாய் விட்டிருக்கும் பக்ஷத்தில் தான் பிரம்மச்சாரியாகவே தன் வாழ்நாள் முழுவதும் கழிப்பதாகவே நிச்சயித்துக் கொண்டான். இனி சுந்தரியுடன்கூடி தீபாவளிப் பண்டிகைகொண்டாடும் நன்னாள்ஏற்படாதோ என்னமோ என்பதை நினைக்க அவனது நெஞ்சம் பதறியது.

அப்பொழுது நர்ஸ் மிஸ். த்ரிபுராவந்து "ஸார், மருந்து, ஸார் மருந்து" என்று இருமுறை அழைத்த பின்னரே கனவு உலகத்திலிருந்த துரைசாமிக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

அப்பொழுது துரைசாமி "ஐந்து நிமிஷத்தில் திரும்பி வருகிறேனென்று சென்றவள் ஏன் இவ்வளவு நேரம்" என்று அவளை வினவினன்.

"இன்று தீபாவளி யல்லவா? எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கோடியுடுத்து, என் தாயார் கிராமத்திலிருந்து அனுப்பிய பணியாரங்களை புசித்து தீபாவளி கொண்டாடிவிட்டு வர ஐந்து நிமிஷங்கள் தாமதமாயிற்று. மன்னிக்கவும். கூப்பிட்ட குரலுக்கென்று கதவருகில் சேவகனை நிறுத்திவிட்டுச் சென்றிருந்தேனே?"

"நீங்கள் கோடியுடுத்தி என்றெல்லாம் சொல்வதைப் பார்த்தால் நீங்கள் தமிழர் போல் தோன்றுகிறதே?"

"ஆமாம், என் தேசம் தமிழ் நாடுதான். லேடி இர்வின் மெடிகல் காலேஜ் சேர்ந்து படிப்பதற்காக நான் டெல்லிக்கு வந்துள்ளேன். இந்த வருடம் அப்ரன்டீஸ் கோர்ஸ் முடிந்தவுடன் எங்கள் கிராமத்திற்கு திரும்பிச் சென்றுவிடுவேன்."

"உங்கள் கிராமத்தின்பெயரென்ன?"

"பூங்காவனம்"

துரைசாமியின் தலை சுழன்றது "ஆ, என்ன? பூங்காவனம்? பூங்காவனம், மிஸ் த்ரிபுரா? திரிபுரசுந்தரியா நீ! என் கண்மணியா நீ?" என்று வாய் குளறி ஆனந்தக் கண்ணீர் பெருக்கிய வண்ணம் வினவினன்.

மிஸ் த்ரிபுரா புன் முறுவலுடன் "ஆமாம், மாமா நீங்கள் இங்கிலாந்து சென்றபின், நீங்கள் நம் நாடு திரும்புவதற்குள், நன்றாக படித்து பாஸ் செய்து கெட்டிக்காரியாக இருக்கவேண்டுமென்ற ஆசையுடன் சென்னையில் எனது அத்தையின் வீட்டில் வந்து வசித்துக்கொண்டு படிப்பை விருத்தி செய்துக்கொண்டேன். அம்மாவும் தாங்களும் வந்து பார்த்து திடீரென்று ஆச்சரியப்படட்டுமென்ற ஆசையில் தங்களுக்கு இந்த விஷயத்தைப் பற்றி

(387-ம் பக்கம் பார்க்க)

எலியின் மனைவி

(பார்வதி)

ஸ்ரீமான் எலி வெகுநாள்வரை பிரம்மச்சாரியாகவே இருந்து வந்தது. அதன் சிநேகிதர்கள் 'ஏன் இப்படித் தனிமையில் காலம் தள்ளவேணும். விவாகம் செய்துகொண்டு குடித்தனம் நடத்தக்கூடாதா' என்று கேட்கும்போதெல்லாம், எலி ஜம்பமாகத்தான் அவர்களைப் போல் அசட்டுத்தனமாய் சம்சாரத்தில் மாட்டிக்கொள்ளப் போவதில்லை என்று சொல்லிக்கொள்ளும்.

ஆனால் உண்மை என்னவென்றால் எலிக்கு சங்கீதத்தில் ரொம்ப ஆசை தனக்கு வாழ்க்கைப்படும் பெண் பாட்டில் கெட்டிக்காரியாய் இருக்கவேண்டும் என்று நினைத்தது அந்த எலி. பெற்றோர்கள் நிச்சயித்த பெண்களை எல்லாம் பாடச்சொல்லி பரிக்ஷை செய்யும். பிறகு "அதற்கு சாரீரம் இனிமை இல்லை. இந்த எலிப் பெண்ணுக்கு தாளக் கட்டில்லை" என்று ஒவ்வொன்றாய் குற்றம் சொல்லிக் கழித்து வந்தது. இதன் செய்கையைக் கண்ட மற்ற எலிகளெல்லாம் ஒன்றுகூடி "இதற்குப் பெண் கொடுப்பதில்லை" என்று தீர்மானித்து விட்டன.

அந்த எலி தன் யௌவனப் பருவம் விவாகமின்றி கடந்து கொண்டிருப்பதைப்பற்றி விசனத்தோடு ஒரு நாள் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தது. அப்போது அதன் காதண்டை மிகவும் இனிமையான சங்கீதம் ஒலித்தது. எங்கிருந்து இந்த கானம் கேட்கிறது என்று அறிய எலி திரும்பியது. அவ்விடம் ஒரு கொசு இன்பமாய் பாடிக்கொண்டிருந்தது. எலி அந்தப் பாட்டில் லயித்து, அந்தக் கொசுவின்மீது மோகம் கொண்டு விட்டது. கொசுவிடமும் அதைத் தெரிவித்து தன்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி கேட்டது. அதற்கு கொசு சம்மதிக்கவில்லை. கொசு எலியிடம் சொன்னதாவது. "இனம் இனத்தோடு தான் கல்யாணம் செய்யவேணும். என்ன தான் வேறு இனத்தாரிடம் மேன்மை இருந்தாலும், இதனால் அவர்களோடு கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்த முடியாது. கல்யாணம் செய்து கொள்ளும் இருவரின் நடை உடை வழக்கங்களெல்லாம் ஒத்திருந்தால்தான் வாழ்நாளில் சந்தோஷம் உண்டு. எலி இனத்தாராகிய உங்களுக்கும் கொசு இனமாகிய எங்களுக்கும் சம்பந்தம் சந்தோஷகரமாயிராது" என்றது.

ஆனால் எலி மிகவும் மன்றாடியதால் கொசு சம்மதிக்கக் கல்யாணமும் நடந்தது. ஒருநாள் எலியும் கொசுவும் தனித்திருக்கையில் எலி கொசுவை ஒரு பாட்டுபாடச் சொன்னது. கொசுவும் எலியின் காதண்டை பறந்து பிரம்மானந்தமாய் பாடிற்று. அந்தப் பாட்டில் மூழ்கி எலியும் மெய்மறந்து இருந்தது. கொசு பறந்து பறந்து பாடின. சிரமம் தீர கொஞ்சம் இளைப்பாற எலியின் கண்ணிமையில் வந்து உட்கார்ந்தது. எலி சங்கீதத்தில் மெய்மறந்திருந்ததால் தன் கண்ணில் அமர்ந்திருப்பது தன் ஆசை மனைவி என்ற நினைவில்லாமல் கண்ணைக் காப்பாற்றும் நினைவாய் முன்னிரண்டு கால்களையும் சேர்த்துத் தட்-

டிற்று. அதன் குறிக்குச் சரியாய் கொசு உட்கார்ந்திருந்ததால் இடையில் அகப்பட்டு கொசு நசுங்கிவிட்டது. கொசு நசுங்கிய பிறகுதான் எலிக்குப் பிரக்ஞை வந்தது. அது உடனே திகிலடைந்து, ஐயோ நம் மனைவியைக் கொன்று விட்டோமே என்று ரொம்பவும் துக்கமடைந்தது.

அது தன் துக்கத்தை தனிமையில் போய் அழுது தீர்க்க கடற்கரைக்குச் சென்றது. அதைக்கண்ட கடல், "எலியே, எலியே! ஏன் விசனமாயிருக்கிறாய்?" என்று கேட்டது. அதற்கு எலி, "ஐயோ உனக்கு சமாசாரம் தெரியாதா? என் அருமை மனைவி கொசு இறந்து போயிற்றே." என்றது. அது கேட்ட கடல் "இவ்வளவு பெரிய விஷயம் உலகில் நடந்திருக்கிறது. இதில் நாம் பங்கெடுத்து நம் விசனத்தைக் காட்டாமலிருந்தால் நன்றாயிராது" என்று தன் ஏழுபாகத்தையும் ஒரு கலக்காய் கலக்கிக் கொண்டது.

ஒரு யானை தினந்தோறும் கடலில் குளிக்க வரும். அன்று யானை குளிக்க இறங்கும்போது ஏழு கடலும் கலங்கியிருக்கவே அது கடலைப்பார்த்து "கடலே, கடலே! ஏன் இன்று இப்படிக் கலங்கியிருக்கிறாய்?" என்று கேட்டது.

அதற்குக் கடல் யானையைப் பார்த்து "மனிதர்கள் ஒருவருக்கொருவர் 'மத யானை யாட்டமா அவனைப் பார்' என்று நியாயமாய்த்தான் திட்டிக்கொள்கிறார்கள். இந்த ஊரில் இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்க என்னை ஏன் கலங்கி இருக்கிறாய், என்று கேட்கிறாயே! நம் எலியின் பெண்சாதி கொசு செத்தது உனக்குத் தெரியாதா? நான் என் விசனத்தைக் காட்டத்தான் கலங்கியிருக்கிறேன்" என்றது.

உடனே "யானை இதில் நாமும் கலந்து கொள்ளவேணும்" என்று தீர்மானித்துத் தன் துக்கத்தைக்காட்ட தன் தந்தமொன்றை முறித்துக்கொண்டது. பிறகு அது வழக்கமாய் தழைதின்னப் போகும் ஒரு அரசமரத்தண்டை போய் நின்றது. அதைக்கண்ட அரசமரம், "யானையே யானையே! ஏன் இப்படி தந்தத்தை ஒடித்துக்கொண்டு விசனமாய் நிற்கிறாய்?" என்று கேட்டது. அதற்கு யானை, "உலகில் மனிதர்கள் நியாயமாய்த்தான் 'மரமாட்டமா அவனைப் பார் உணர்ச்சியே யில்லாமல்' என்று சொல்லுகிறார்கள். இந்த ஊரில் இவ்வளவு பெரிய சமாசாரம் நடந்திருக்கையில் நீ அறிந்துகொள்ள வில்லையே; சொல்லுகிறேன் தெரிந்துகொள். 'நம் எலியின் பெண்சாதி கொசு செத்துவிட்டது. அதற்காக ஏழுகடலும்கலங்கி யிருக்கிறது. நானும் என் விசனத்தைத் தெரிவிக்க கொம்பொடித்துக் கொண்டேன்" என்றது! அது கேட்ட அரசமரம் "நாம் சும்மா யிருந்தால் நன்றாயிராது" என்று தன் விசனத்தைக் காட்டத் தன் இலைகளை உதிர்த்துக்கொண்டது.

ஒரு கொக்கு அந்த மரத்திற்கு வந்து தங்குவதுண்டு. அன்று அது வந்து மரத்தில் ஒரு இலை இல்லாமலிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து. மரத்தைப் பார்த்து, "மரமே, மரமே' ஏன் இப்படி இலைகளை உதிர்த்தாய்" என்று கேட்டது.

அதற்கு மரம் கொக்கைப் பார்த்து, "ஒன்றிலும் கலந்து கொள்ளாதவர்களை மனிதர்கள் 'நீ மகா கொக்கோ' என்று நியாயமாய்த்தான் சொல்லுகிறார்கள். பாரேன்! இந்த ஊரில் இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்க நீ அறிந்துகொள்ளாமலிருந்திருக்கிறாயே! சொல்லுகிறேன், கேள், நம் எலியின் பெண்சாதி கொசு இறந்தே போயிற்று. அதனால் ஏழுகடலும் கலங்கிப் போயிற்று. மதயானை கொம்பை முறித்துக் கொண்டது. நான் என் துக்கத்தைக்காட்ட இலையை உதிர்த்தேன்" என்றது.

அது கேட்ட கொக்கு தன் துக்கத்தைக் காட்ட ஒரு கண்ணை குத்திக்கொண்டது; பிறகு அது ஒரு குட்டிச் சுவரின் பேரில் ஒற்றைக் காலால் நின்று கொண்டிருந்தது. அந்தக் குட்டிச் சுவர் கொக்கைப் பார்த்து "கொக்கே, கொக்கே! ஏன் கண்ணைக் குத்திக்கொண்டு கலங்கி நிற்கிறாய்" என்று கேட்டது.

அதற்கு கொக்கு "குட்டிச் சுவராட்டமா, என்ன தெரியறது உனக்கு என்று நியாயத்தோடுதான் மனிதர்கள் பேசுகிறார்கள். இந்த ஊரில் இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருககு என்னை ஏன் கலங்கி நிற்கிறாய் என்று கேட்கிறாயே! சொல்லுகிறேன், கேள். நம் எலியின் பெண்சாதி கொசு மாண்டே போயிற்று. அதனால் ஏழுகடலும்கலங்கிப் போயிற்று. மத யானையும் கொம்பை முறித்துக் கொண்டது. அரசமரமோ இலையை உதிர்த்துவிட்டது. நான் என் விசனத்தைத் தெரிவிக்க கண்ணைக் குத்திக்கொண்டு கலங்கி நிற்கிறேன்" என்றது.

அது கேட்ட குட்டிச்சுவர் துக்கம் தாங்காமல் பொத்தென விழுந்து விட்டது.

அதன் பக்கத்தில் இருந்த பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பிள்ளைகள் ஒன்றுக்கு உட்கார அந்தக் குட்டிச்சுவரின் மறைவுக்கு வருவார்களாம். அப்படி அன்று வந்தபோது மறைவில்லாமல் குட்டிச்சுவர் விழுந்திருப்பதைக் கண்டு அவர்கள் குட்டிச்சுவரைப் பார்த்து "குட்டிச் சுவரே, குட்டிச் சுவரே! ஏன் விழுந்து கிடக்கிறாய்,?" என்று கேட்டார்களாம். அதற்கு அந்தக் குட்டிச் சுவர் "சிறு பிள்ளைத்தனமாய் ஒன்றும் தெரியாதவனாய் இருக்கிறாயே என்று நன்றாய்த்தான் சொல்லுகிறார்கள். இந்த ஊரில் இவ்வளவு பெரிய காரியம் நடந்திருக்கு உங்களுக்குத் தெரியவில்லையே! சொல்லுகிறேன், கேளுங்கள். நம் எலியின் பெண்சாதி கொசு செத்துப்போச்சு. ஏழு கடலும் கலங்கிப் போச்சு. மதயானை கொம்பொடித்துக் கொண்டது. அரசமரம் இலையை உதிர்த்துக் கொண்டது. கொக்கு கண்ணைக் குத்திக்கொண்டது. என் விசனத்தை வெளிப்படுத்த குட்டிச் சுவரான நான் பொத்தென்று விழுந்து கிடக்கிறேன்" என்றது.

உடனே பையன்கள் தங்கள் விசனத்தைக் காண்பிக்க, கையிலிருந்த பென்ஸிலை ஒடித்தெறிந்து விட்டார்கள், மணி அடித்து பள்ளிக்கூடம் போனதும் வாத்தியார் எழுதுவதற்காக எல்லாரையும் பென்ஸிலை எடுத்துக்கொள்ளும்படி சொன்னார். அதற்குப்பிள்ளைகள் "என்ன சார்! இரக்கமற்ற வாத்தியார் என்பது சரியாய்த்தானிருக்கிறது. எலியின் பெண்சாதி கொசுசெத்து ஏழுகடலும் கலங்கி, மதயானை கொம்பொடித்துக்கொண்டு, அரசமரம் இலையை உதிர்த்துக்கொண்டு, கொக்கு கண்ணைக் குத்திக்கொண்டு, குட்டிச்சுவர் பொத்தென்று விழுந்து கிடக்கையில், சிறுபிள்ளைத் தனமாய் நாங்கள் எங்கள் விசனத்தைக் காட்டாமலிருந்தால் நாளை ஊரில்பேச்சுவராதா? ஆகையால் எங்கள் விசனத்தைக் காண்பிக்க எங்கள் பென்ஸில்களை உடைத்தெறிந்து விட்டோம். இந்தசமயத்திலா இரக்கமில்லாமல் எங்களைப் பாடம் எழுதச் சொல்லுகிறீர்" என்றார்கள்.

உடனே வாத்தியாருக்குக் கோபம் வந்துவிட்டது. "இனங்கெட்ட சம்பந்தம் எலி செய்து கொண்டு பெண்டிழந்தால் பள்ளிப் பிள்ளைகளாகிய உங்களுக்கு என்ன வந்தது. பாடத்துக்குச்சோம்பி அன்றோபென்ஸிலை ஒடித்திருக்கிறீர்கள்" என்று நன்றாய் பூசை கொடுத்தார்.

(384-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதவில்லை. தாங்கள் இந்தியா திரும்பியும் பராமுகமாக விருப்பதை கண்டு, தங்கள் இருப்பிடமும் எங்களுக்கு தெரியாமல் போகவே 'இனி கன்னிகையாக விருந்து காலங் கழிப்போ'மென்ற மனோபாவத்துடன் அந்த பக்கமே இருக்கப் பிடிக்காமல் இவ்விடம் வந்து மெடிகல் காலேஜில் சேர்ந்தேன்" என்று தழதழத்த குரலில் கூறி கண்ணீர் சொரிந்தாள்.

"ஆ! என் கண்ணே! சுந்தரி என்னை மன்னிப்பாயா" என்று தனது பலவீனமான கைகளை மேலே தூக்கி சுந்தரியை ஆலிங்கனம் செய்துகொண்டு ஆனந்தக் கண்ணீர்விட்டான் துரைசாமி.

பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணமலை
தலைமை ஆபீஸ்.

59-A, லாய்ட்ஸ் ரோடு,*
ராயப்பேட்டை, மதராஸ்.
(பிராஞ்சு)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணய்"

இது சர்வரோக நிவாரணி பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசிலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்

லோகல் டிஸ்டிரிபியூடர்ஸ்: ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:

அப்பா அண்டு கம்பெனி,
மதறாஸ்

T. N. நாகலிங்கம் பிள்ளை,
மதுரை.

மீனாக்ஷி ஸ்டோர்ஸ்,
தேவகோட்டை

T. N. சொக்கலிங்கம் பிள்ளை,
அண்டு சன்ஸ், மதுரை.

* டாக்டர் பரசுராம் அவர்கள் மதராஸ் வாசிகளின் சௌகரியத்தின் பொருட்டுப் பலர் வேண்டுகோளுக்கிணங்கி, ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1-ம் தேதிமுதல் 10 தேதிகள்வரையில் பிராஞ்சு ஆபீஸில் தங்குவார்.

மன்னார்குடி டி. முன்சீப் கோர்டு

1935 & O. S. No. 141

முத்தடைக்கப்ப செட்டியார்—வாதி

மருதமுத்து வாண்டையார்—ஏஜண்டு

A. P. கிருஷ்ணசாமி வாண்டையார் etc. } பிரதிவாதிகள்

இந்த நம்பர் பாக்கி டிக்கிரித் தொகை ரூ. வுக்காக இந்த நம்பர் முதல் பிரதிவாதியின் தாவர சொத்துக்களை ஜப்தி செய்து ஏலத்துக்கு கொண்டுவந்ததில் இந்த நம்பர் முதல் பிரதிவாதிக்கு C. P. C. OR 21 R 66-ன்படி நோட்டீசும் டைட்டில்டீடு நோட்டீசும் பல தடைவைகள் போயும் சார்வாகாததினால் டி யாருக்கு பிறக்கும் நோட்டீசை ஒட்டி சார்வு செய்ய வேணுமாய் வாதியால் மனு கொடுத்து டி நோட்டீசை டி முதல் பிரதிவாதியின் மன்னார்குடி தாலுக்கா மூவர் கல்லூரிலுள்ள வீட்டு வாசலிலும் இந்த கோர்ட்டு வாசலிலும் ஒட்டி சார்வு செய்ய உத்திரவாகி 15-2-1940-ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அதில் ஆக்ஷேபனை இருந்தால் டி தேதியில் டி கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும்.

மன்னார்குடி
29—1—40 }

S. கோபாலய்யர்
வாதி வக்கீல்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

O. S. 330/24

A. குமரப்ப முதலியார்—வாதி

இப்பொழுது பர்மா சேர்ந்த Kunlong-ல் 52 கெ. ரோட்டில் மோட்டார் பஸ் Plyer, வேலை பார்க்கும் சோலைக்குளம் பொன்னம்பல வாண்டையார் என்கிற பொன்னுசாமி வாண்டையார் மகன் கணேச வாண்டையார் } பிரதிவாதி

இதனால் தெரிவிப்பதாவது, மேலே கண்ட வியாஜ்யத்திலே டிக்கிரி பெற்றவராகிய வாதி என்பவர் ஏல இஸ்த்தியாரில் கண்ட சொத்துக்களின் விற்பனைக்காக மனுசெய்து கொண்டிருப்பதால் விற்பனை இஸ்த்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 6-2-40 தேதி குறிப்பிட்டிருப்பதால் அன்று பிரதிவாதி கோர்ட்டில் ஆஜராகி ஆக்ஷேபணை இருந்தால் தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒருதலை பக்ஷமாக உத்திரவாகும்.

23-1-40.

A. ராஜப்ப முதலியார்,
அட்வகேட்.